# இயேசுவே வாரும்


காலேப் யோசுவா
செல்: 9444701953, 9445471080
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com


ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22.20


எண்: 11/2 மாடி, பெரியார் நகர், E. B. எதிர்
சென்னீர்குப்பம், பூந்தமல்லி போஸ்ட்,
சென்னை-600056


## தேவனுடைய ஆவி / பரிசுத்த ஆவி உங்களில் வாசமாயிருந்தால் உங்கள் சரீரம் தேவனுடைய ஆலயம் (1.கொரி 3:16, 6:19) மற்றபடி பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்பும் உள்ள பறவைகளுடைய கூடுமாயிருக்கிற ஸ்தாபன சபைகளின் ஆவி / அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி குடி கொண்டியிருக்கிற சாத்தானுடைய சிங்காசனம் (வெளி 18:2, 1யோ 4:2,3; வெளி 2:13)

1. தேவனுடைய சித்தத்தினாலே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீக / திவ்விய சுபாவத்தில் பங்குகொண்டு, கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் அதற்கு பரிபூரணமாக அளிக்கப்படும் வரைக்கும் கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. மேற்கண்ட தலைப்புக்காக நான் வேதவாக்கியங்களில் இருந்து தெரிந்துக்கொண்ட வேதாகமப்பகுதி 2சாமு 7:1-17 அல்லது 1 நாளா 17:1-15 வசனங்களில் அடங்கியுள்ளது. இப்பொழுது கவனியுங்கள் : கர்த்தருடைய வாக்கின்படி தீர்க்கதரிசியாகிய சாமுவேல், யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருக்கிற எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லெகேமுக்கு வருகிறான். (மீகா 5:2,1 சாமு 16:1) எதற்கு? பென்யமீன் கோத்திரத்தாரில் கீஸ் என்னும் பேருள்ள மகா பராக்கிரமசாலியான ஒரு மனுஷன் இருந்தான். அவனுக்கு சவுல் என்னும் பேருள்ள சௌந்தரியமான வாலிபனாகிய ஒரு குமாரன் இருந்தான். இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சௌந்தரியவான் இல்லை. எல்லா ஆண்களும் அவனுடைய தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். (1 சாமு 9:1,2) இவன் கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணப்பட்டான். சாமுவேல் தீர்க்கதரிசி தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை முத்தம் செய்து, கர்த்தர் உன்னை தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் என்றான். (1 சாமு 10:1) சேனைகளின் கர்த்தர், இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறுத்த செய்கையை மனதில் வைத்திருந்தார். (1சாமு 15:2) இந்த அமலேக்கு யார்? ஆபிரகாம், ஈசாக்கின் தகப்பன். ஈசாக்கிற்கு இரு குமாரர்கள். ஏசா மற்றும் யாக்கோபு. ஏசாவின் சந்ததி ஏதோமியர் என்று அழைக்கப்பட்டனர். யாக்கோபின் சந்ததி இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்டனர். ஏசாவிற்கு ஆதாள் எலீப்பாசை பெற்றாள். எலீப்பாசுக்கு திம்னாள் மறுமனையாட்டியாயிருந்து அமலேக்கைப்பெற்றாள். (ஆதி 36:1,4,12) இஸ்ரவேல் தேவனுடைய மணவாட்டிக்கும், ஏசாவின் சந்ததி திரித்துவ ஸ்தாபன சபைக்கு எடுத்துக்காட்டு. இன்று ஒரே தேவன், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று விசுவாசித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவைத்தரித்துக்கொண்ட பிள்ளைகளை திரித்துவ ஸ்தாபன சபைகள் தூஷித்துவருகிறது. அன்று அமலேக்கை மனதில் வைத்திருந்தது போல, இன்று சபைக்காலங்களில் திரித்துவ ஸ்தாபன சபைகளை கர்த்தர் மனதில் வைத்துள்ளார். ஒரே தேவன் உண்டு, அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகயிருக்கிறார். (எபி 13:8) அவரே கடந்த, நிகழ், வருங்காலங்களில் மாறாத அல்பாவும், ஓமெகாவுமாயிருக்கிறார். தேவத்துவம் அவரில் மாத்திரமே பரிபூரணமாக

வாசம் செய்கிறது. அவரே பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற மூன்று பதவிகளுக்கும் உரியவர் என்பதை மறுதலிக்கும், பாவமன்னிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் மாத்திரமே உண்டு என்பதை மறுதலிக்கும் திரித்துவ ஸ்தாபன சபை கூட்டத்தாரை, இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும் கள்ளகபடமுள்ள வேலையாட்களை, இரு மனைவிகளைக் கொண்டு தேவசித்தத்திற்கு புறம்பாக ஊழியம் செய்கிறவர்களை, பெண் பிரசங்கிகளை, கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களை, பாலாசீர்லாரி, புதுக்கோட்டை ஜெயராஜ், வேலூர் தாமஸ், ஆப்ரிக்கா காக்குவ்பிலிப்புக்கு ஊழியம் செய்த, செய்யும் பக்கவழியாய் நுழைந்த ஆடுகளை கர்த்தர் மனதில் வைத்திருக்கிறார். யூதாஸ் இயேசுவை முத்தத்தால் காட்டிக்கொடுத்தான். இன்று அநேக யூதாஸ்கள் தங்கள் கிரியைகளினால் இயேசுவை மறுதலிக்கிறார்கள், காட்டிக்கொடுக்கிறார்கள். இவர்களையும் கர்த்தர் தம்முடைய மனதில் வைத்திருக்கிறார். காலேப் யோசுவாவை தங்கள் வீட்டிற்கு வரவேண்டாம், சபைக்கு வரவேண்டாம் என்றவர்களையும், ஊழியத்தின் பாதையில் பயமுறுத்தியவர்களையும், முறுமுறுத்தவர்களையும் கர்த்தர் மனதில் வைத்திருக்கிறார். அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கித்தீரும் மட்டும் அவர்களோடு யுத்தம்பண்ணி அவர்கள்மேல் இரக்கம் வைக்காமல் புருஷரையும் ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுப்போடக் கடவாய் என கர்த்தரிடமிருந்து சவுல் கட்டளைப்பெற்றான். (1சாமு15:3,18) ஆனால் சவுல் அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடு பிடித்தான். ஜனங்கள் யாவரையும் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணினான். அதோடுமட்டுமல்லாது ஆடு மாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாம் தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்புவித்து, அற்பமானவைகளையும், உதவாதவைகளுமாகிய சகலவஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப்போட்டான். இதனால் சவுலை ராஜாவாக்கியது கர்த்தருக்கு மனஸ்தாபமாயிருந்தது. இன்றும் அநேகருக்கு பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்தி பாவமன்னிப்புக்கு வழியை திறந்துக்கொடுத்து, இக்காலத்திற்குரிய தூதனையும், செய்திகளையும் அடையாளம் காட்டினதற்காக மனஸ்தாபப்படுகிறார். ஏனென்றால் இவர்கள் தேவனுடைய வார்த்தையையும் தூதனுடைய செய்தியையும் மறுதலிக்கலானார்கள். நாய், தான் கக்கினதை திண்ணவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே அவர்களுக்கு சம்பவித்தது. (2பேது 2:22) சவுல் கர்த்தரைவிட்டு திரும்பி, அவர் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான். (1சாமு15:8-11) கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்படியாமற் போனான். கர்த்தருடைய சொல்லைக்கேளாமற் போனான். ஆதலால் தேவன் இஸ்ரவேலின் ராஜ்யத்தை அவனைவிட உத்தமனுக்கு கொடுக்க சித்தம் கொண்டார். (1சாமு 15:22,28) அவ்வாறாகவே சபைக்காலங்களில் கிறிஸ்துவின் இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு வழிமறிக்கும் திரித்துவ ஸ்தாபன சபைகளை கர்த்தர் மனதில் வைத்திருக்கிறார். இவ்வுலக முடிவில் மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் (திரித்துவ ஸ்தாபன சபைகள் மற்றும் அதன் ஊழியக்காரர்கள்) சேர்த்து, அக்கினிச்சூளையிலே போடுவார். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத் 13:41,42) ஆதலால் என் ஜனங்களே நீங்கள் ஸ்தாபன சபைகளின் பாவங்களுக்கு உடன்படாமலும், அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள். (வெளி18:4)

3. இப்பொழுது தீர்க்கதரிசியாகிய சாமுவேல் பெத்லெகேமுக்கு வருகிறான். அந்த வழிப்பிரயாணத்தின் நோக்கம் சவுலின் ஸ்தானத்தில் ஈசாயின் குமாரர்களில் ஒருவனை ராஜாவாக அபிஷேகம் பண்ணுவதற்காகும். (1சாமு16:1) சாமுவேல் பெத்லெகேம் வந்து அங்குள்ள மூப்பர்களை பலி விருந்துக்காக அழைக்கிறான். அந்த பலிவிருந்தின் நோக்கம் தேவன் ராஜாவாக தெரிந்துக்கொள்ளயிருக்கும் நபரை காண்பதற்காகும். அந்த பலிவிருந்துக்கு தாவீதின் தகப்பனாகிய ஈசாய் மற்றும் அவன் சகோதரர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். (1சாமு16:5) தாவீது அப்பொழுது ஆட்டுமந்தையில் இருந்தான். (1சாமு16:11) ஸ்தாபன சபைகளை விட்டு வெளியே வா என்ற தேவனுடைய அழைப்பு வேறு. விருந்துக்கு வா என்ற அழைப்பு வேறு. ஆனால் தேவனுடைய பணிக்கு, ஊழியத்திற்கு தெரிந்துக்கொள்ளும் அழைப்பு வேறு. ஒன்று இரட்சிப்புக்கான அழைப்பு. பாவிகளை மனந்திரும்ப அழைக்கப்படும் அறைகூவல். (லூக்5:32) நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக, எங்கள் சுவிசேஷத்தினாலே (அப்2:38,1கொரி 15:1-3) அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார். (2தெச2:14) அப்போஸ்தலர்களுடைய சுவிசேஷத்தினாலே, பாவமன்னிப்புக்கு, இரட்சிப்புக்கு கொடுக்கப்பட்ட நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஆனால் திரித்துவ ஸ்தாபன சபைகளிலே கொடுக்கப்பட்ட நாமம் பிதா குமாரன் பரிசுத்த ஆவி. ஆனால் இரட்சிப்புக்கு அப்படியொரு நாமம் வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படவில்லை. திரித்துவ ஸ்தாபன சபைகள் அதாவது அந்த மகா வேசி மற்றும் அவளுடைய குமாரத்திகளின் கள்ள உபதேசங்களை கர்த்தர் மனதில் வைத்திருக்கிறார். ஆக இரட்சிப்புக்கு அழைப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால். இந்த அழைப்பு ஒருவருடைய ஊழிய அழைப்பிலிருந்து வேறு. முந்திய அழைப்புக்கு அழைக்கப்பட்டவர்கள் அநேகர். இவர்களில் ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டவர்கள் சிலர். (1கொரி.1:1, ரோ1:2) இந்த அழைப்பு எப்படிபட்டதென்று பாருங்கள். நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னை பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினாலே அழைத்த தேவன். எதற்கு? தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில்

சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக (கலா1:15,16) ஆக நம்முடைய செய்திக்கடுத்த காரியத்தில் ஈசாய் மற்றும் அவருடைய குமாரர்களில் தாவீது தவிர மற்ற யாவரும் பலி விருந்திற்காக அழைக்கப்பட்டார்கள். இந்த ஈசாயிக்கு எட்டு குமாரர்கள் உண்டு. அவர்களில் இளையவன் தான் தாவீது. இவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். ஈசாயின் குமாரர்களில் தாவீது தவிர, இதர ஏழு பேரும் ஊழிய அழைப்பில் இல்லை. ஆதலால் கர்த்தர் அவர்களை நிராகரித்தார். தாவீது தேவனுடைய பணிக்கென்று, அழைக்கப்பட்டு தெரிந்துக்கொள்ளப்பட்டான். சவுலுக்கு அடுத்து இஸ்ரவேல் ஜனங்கள் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். இந்நாட்களில் பைபிள் ஒன்றையும், பாட்டு புத்தகம் ஒன்றையும் ஒரு பையில் வைத்து, வீடுவீடாக ஊர்ஊராக சுற்றித்திரிகிறவர்கள் அனைவரும் ஊழியத்திற்கு தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் என்ற நிலை உள்ளது. ஏழாம் சபைக்கால தூதன் பிரசங்கித்த செய்திகளை கொஞ்சம் கற்று, செய்தி புத்தகங்கள் மற்றும் தங்களால் மொழிப்பெயர்க்கப்பட்ட சில புத்தகங்களை கைகளில் கொண்டு ஊர்ஊராக சுற்றிவலம் வரும் நபர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் என கருதப்படுகின்றனர். ஆனால் அது அப்படியல்ல. இவர்கள் தேவசித்தத்திற்கு மாறாக, புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். இவர்களால் தான் தேவனுடைய சபையில் உபதேசங்களில் எங்கும் குழப்பங்கள். ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு விசுவாசிகளின் இழுபறி.

4. ஒருவனுடைய ஊழிய அழைப்பு தேவனிடமிருந்து வரவேண்டும். அந்தியோகியா பட்டணத்தில் உள்ள சபையில் அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து வந்திருந்தப்போது பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களை பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் தேவன் அழைத்த ஊழியத்திற்காக அனுப்பப்பட்டார்கள். (அப்13:2-4) பரிசுத்த ஆவிதான் ஒருவனை கண்காணியாக சபையில் வைக்க வேண்டும். (அப்20:28) பரிசுத்த ஆவியினால் நியமிக்கப்படாத கண்காணிகள், மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள். இவர்கள் மாறுபாடானவைகளையே போதிப்பார்கள். (அப்.20:29,30) இவர்கள் திருவசனத்திற்கு கீழ்படியாதவர்கள். பாருங்கள் எஜமான் தான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பவேண்டும். (மத்.9:38) உங்கள் ஸ்தாபன சபை தலைவர்களால் அனுப்ப முடியாது. நீங்களாகவே உங்களை ஏற்படுத்திக்கொள்ள முடியாது. உங்களை தேவனுடைய பணிக்கு அழைக்க, அனுப்ப அவர் ஒருவருக்கே அதிகாரம் உண்டு. அவரால் அனுப்பப்படாத யாவரும் கள்ளகபடமுள்ள வேலையாட்கள். இரட்சிக்கப்படாத மனைவி பிள்ளைகளையுடைய ஒருவன், சாட்சியற்ற இல்லற வாழ்க்கை வாழ்ந்துவரும் ஒருவன் எப்படி கர்த்தரால் ஊழியத்திற்கென்று அழைக்கப்படுவான்? ஊழிய அழைப்பு விஷயத்தில் நீங்கள் பார்க்கும் விதமாக தேவன் பார்ப்பதில்லை. மனுஷர் பார்க்கிற விதமாக தேவன் பார்ப்பது இல்லை. மனுஷர் ஊழியக்காரரின் முகத்தைப் பார்க்கிறார்கள். ஆனால் தேவனோ அவர்களின் இருதயத்தைப் பார்க்கிறார். நீங்கள் ஒருவனுடைய B.Th, M.Th, B.D., M.D., Dr. போன்ற படிப்புகளைப் பார்க்கிறீர்கள். ஒருவனுடைய பதவிகளைப் பார்க்கிறீர்கள். பாஸ்டர், தலைமை போதகர், சபை முதல்வர், சபை ஸ்தாபகர், பிஷப், போப் போன்ற பதவிகளை காண்கிறீர்கள். மேலும் ஒருவர் அணிந்திருக்கும் ஆடைகளை, வெள்ளை பைஜாமா குர்தாக்களை, வெள்ளை வேஷ்டி சட்டைகளை, சூட் கோட் இவற்றைப் பார்கிறீர்கள், சபை கட்டிடத்தை பார்க்கிறீர்கள். சபையில் உள்ள அங்கத்தினரின் எண்ணிக்கைகளைப் பார்க்கிறீர்கள், பொருளாதார நிலையைப் பார்க்கிறீர்கள். ஆனால் தேவனோ படிப்பறியாத பேதைகளை பார்க்கிறார். அவனுடைய வாயில் தம்முடைய வார்த்தையைப் போட்டு அவனை பேசவைக்கிறார். அதிகம் படித்து பட்டம் பெற்றவர்களை தெரிந்துக்கொள்ளாமல் ஆடு மேய்ப்பவனை தெரிந்துக்கொண்டார். தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதலுக்கு கல்வி அறிவு, பதவி, பட்டங்கள் ஒரு தகுதியாக இல்லை. கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த தாவீதை, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து தேவன் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலை மேய்ப்பதற்குத் தெரிந்து கொண்டார். (சங்.78:70-72) தாவீது தன்னுடைய அழைப்புக்குறித்து : இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என் தகப்பனுடைய வீட்டார் எல்லாரையும் என்னைத் தெரிந்துக்கொண்டார். என் தகப்பனுடைய குமாரர்களுக்குள் என்மேல் பிரியம் வைத்தார் என்கிறான். (1 நாளா28:4) பவுல் தன்னுடைய கல்வி அந்தஸ்துகள் யாவற்றையும் நஷ்டமென்றும் குப்பையுமாக எண்ணியபோதுதான் தேவனால் பயன்படுத்தப்பட்ட பாத்திரமானான். (பிலி3:11)

5. தாவீது ராஜாவாகும் போது முப்பதுவயதுடையவனாக இருந்தான் (2சாமு.5:4) எப்ரோனில் (Hebron) தன் ராஜ்யபாரத்தை ஸ்தாபித்தான். அந்நாட்களில் எருசலேமில் எபூசியர் குடியிருந்தார்கள். (2சாமு.5அதி) தாவீது சீயோன் கோட்டை என்னும் எருசலேமைப் பிடித்தான். அது அவனுடைய நகரமாயிற்று. (2சாமு5:7) இவன் முதலாவது யூதாவம்சத்தாரின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். (2சாமு2:4) அதன்பின் எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின்மேல், யூதாவின் மேல் ராஜ்யபாரம் பண்ணினான். (2சாமு5:3-5) தாவீதின் சந்ததியில்தான் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்து, தாவீதின் குமாரன் என அழைக்கப்பட்டார். (மத்1:1, 9:27, 21:9) தாவீது நாளுக்குநாள் விருத்தி அடைந்தான். ஏனெனில் சேனைகளின் கர்த்தர் அவனோடே கூடயிருந்தார். (2சாமு5:10) 1978 முதல் இதுவரை ஒரு தனிப்பட்ட மனிதனாக கர்த்தர் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்றிவர எனக்கு தேவகிருபை போதுமானதாக இருக்கிறது. இந்த ஊழியத்தை நான் தேடிச்செல்லவில்லை. அவரே கொடுத்தார், உறுதிப்படுத்தினார், ஆதரித்து வருகிறார். ஆனால் அநேகருடைய வசைப்பாடுதல், தூஷித்தல் உண்டு. தன்னை மணவாட்டி என அழைத்துக்கொள்ளும் ஒரு பாஸ்டர் : ஊழியக்காரர்களைக் கடிந்து கண்டனம் பண்ணி எழுதும்

உன் கை குஷ்டத்தில் சூம்பி போய்விடும் என்றான். ஒருவன் உன் பெண்ணுக்கு 35 வயது ஆனாலும் திருமணம் ஆகாது என்றான். ஒருவன் நீ ஆண் தன்மை இல்லாத பொட்டையன் என்றான். இவ்வாறாக வசைப்பாடுகளுக்கு குறைவு இல்லை. ஒருவன் மத்திய புலனாய்வு பிரிவிலிருந்து பேசுகிறேன் என தொலைபேசியிலிருந்து என்னை கைது செய்யப்போவதாக மிரட்டுவான். ஒருவன் போலீஸ் நடவடிக்கை, நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்போகிறேன் என்று மிரட்டுவான். என் தேவன் அவர்களின் மிரட்டல்கள், வசைப்பாடுகள் எல்லாவற்றையும் தம்முடைய மனதில் நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று வைத்திருக்கிறார்.

6. இப்பொழுது தீருவின் ராஜா (Tyre) ஈராம் (Hiram) தாவீதுக்கு ஸ்தானாபதிகளை (Messangers) அனுப்பினான். கேதுரு மரங்களை (Cedar Trees) கொடுத்தான். இது நமது தேக்கு மரங்களைப்போன்று உறுதியானது. அதேவேளையில் இது நல்ல மனமும் கொண்டதாகும். (Cedar trees is a durable and fragrant wood) இது எளிதில் அழியாது. நீண்டகாலம் உறுதியாக இருக்கக்கூடியது. நல்ல வாசனையுள்ள உறுதியான மரம். தீருவின் ராஜா மேலும் தாவீதுக்கு மரத்தச்சர்களையும் (Carpenters) கல் தச்சர்களையும் (Masons) கொடுத்தான். இவர்களைக்கொண்டு தீருவின் ராஜா தாவீதுக்கு ஒரு நல்ல வீட்டைக்கட்டிக் கொடுத்தான். அந்த வீடு பிரதிஷ்டையின் போதுதான் தாவீது சங்கீதம் 30 யை பாடுகிறான்.

7. இதன் பின்பு என்ன நடந்தது? தாவீது தன் இருதயத்தில் குத்தப்பட்டான். அவன் தேவனிடத்திலிருந்து பெற்ற நன்மைகள் கணக்கில் அடங்காதவைகள். தான் கேதுரு மரத்தினால் செய்யப்பட்ட வீட்டில் குடியிருப்பதை நினைத்தான். ஆனால் தேவனுடைய உடன்படிக்கை பெட்டியோ திரையின் கீழ் இருப்பதை நினைத்து மனம் வருந்தினான். நம்மைகளை பெற்றவன் கேதுரு மர வீட்டில், நன்மைகளை கொடுத்தவர் திரையின் கீழ். இதுகூடாது. இதற்கு பரிகாரமாக ஒன்றைச் செய்ய வேண்டும் என தன் உள்ளத்தில் தீர்மானித்தான். இந்நாட்களில் காணிக்கை தசமபாகம் கொடுக்கிறவர்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள். அங்கு மின்விசிறி, குளிர்சாதன வசதி, கட்டில் இல்லை. பிள்ளைகள் படிப்புக்கு போதுமானதாக வசதிகள் இல்லை. ஒரு நல்ல உத்தியோகம் இல்லை. ஏழ்மை நிலை. அதிலும் கர்த்தருக்கு உண்மை. அவருக்குரிய தசமபாகத்தை, தன் சபையை பண்டக சாலை என நினைத்து அங்கு சென்று செலுத்துகிறார்கள். ஆனால் அதை அனுபவிக்கும் ஊழியக்காரர்கள் சுகபோகமான வாழ்க்கை, கார், பங்களா வசதி. பிள்ளைகள் புகழ்பெற்ற பள்ளிகளில், கல்லூரிகளில், குளிர்சாதனமின்றி தூக்கம் வருவதில்லை. இந்த நிலைக்கு யார் காரணம். விசுவாசிகள் தானே. ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுக்காரனுக்கு குறைவு உண்டோ, இல்லை. ஏனென்றால் மக்களிடம் சிந்திக்கும் தன்மை / திறானி இல்லை. ஊழியக்காரர்கள் எதையும் செய்து, அவன் கர்த்தருக்கு கணக்கு கொடுக்கட்டும், நான் கர்த்தருக்குரியதை செலுத்தி விட்டேன் என்கிறார்கள். இது பிசாசு கொடுக்கும் ஒரு தவறான சிந்தனை. உன்னை நீயே ஏமாற்றுகிறாய். தானதர்மம் செய்கிறவர்கள் லோபத்தனமாய் கொடுக்காமல் உதாரத்துவமாய் கொடுக்கவேண்டும் என்று வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. (2கொரி9:5) கர்த்தருக்குரியதை கொடுக்கும்போது அதை யாருக்கு கொடுக்க வேண்டும், அந்த ஈவைப்பெறும் நபர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என அனைத்தும் வேதவாக்கியங்களில் காணப்படுகிறது. அதன்படி செய்தால் மாத்திரமே நீ கொடுக்கும் தசமபாகம் கர்த்தருடைய கணக்கில் போய் சேரும். நீ கொடுக்கும் காணிக்கைகளுக்கும் பலன் உண்டு. மற்றபடி அது தண்ணீரில் எறியப்படும் பணத்திற்கு சமம். இது கடந்த நாட்களில் தண்ணீரில், குப்பைத்தொட்டிகளில் வீசப்பட்ட ரூபாய் 1000/-கும், 500/- கும் சமமாகிவிடும். அது தேவசமூகத்தில் உன் கணக்கில்போய் சேராது. நான் பொதுவாக கிறிஸ்துவ மக்களிடம் காண்பதாவது : தேவன் அவர்களுக்கு நல்லதொரு உத்யோகத்தைக் கொடுக்கிறார். சுகபோகமாக வாழ வசதிகள் நிறைந்த வீட்டைக்கொடுக்கிறார், கீழ்படிதல் உள்ள பிள்ளைகளைக் கொடுக்கிறார். இவ்வாறாக தேவனிடமிருந்து பெற்ற நல்ல ஈவுகளுக்காக அவர்கள் தேவனுக்கு எதைக் கொடுத்தார்கள்? தங்கள் பிந்தைய வாழ்க்கைக்காக சொத்து சுகங்களை சேர்த்தார்கள், பல வங்கிகளில் பல பிரிவுகளில் பணத்தை சேமித்தார்கள். இதுதான் அவர்களது வாழ்க்கை இலட்சியமாக இருந்தது. தனக்கென்றே வாழ்கிறார்கள். எங்கும் எதிலும் சுயநலம். ஆனால் தாவீது அப்படியல்ல. அவனிடத்திலிருந்த மனசாட்சி வேறு. அது இவர்களிடத்தில் இல்லை.

8. அந்நாட்களில் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி கிபியோனில் (Gibeon) திரையின் கீழ் இருந்தது. (1நாளா16:39, 17:1) இது தோலினால் செய்யப்பட்ட தொங்கும் திரை / மறைவு. உடன்படிக்கைப் பெட்டி இந்த மறைவான திரையின்கீழ் இருந்தது. ஆதலால் தாவீது கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக்கட்ட தன் இருதயத்தில் நினைத்தான். (1நாளா22:7) கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும், அவருடைய பாதபடி தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட தன் மனதிலே நினைத்தான். நினைத்ததோடு மாத்திரமல்ல, அதை செயல்படுத்தவும் நினைத்தான். ஆலயத்தைக்கட்ட அனைத்து ஆயத்தப்பணிகளையும் செய்தான். (1நாளா28:2) என்னுடைய ஊழியத்தின் பாதையில் நான் அநேகரை பார்த்திருக்கிறேன். சகோதரனே நான் ஊழியத்திற்கென்று அதைச் செய்ய, இதைச் செய்ய நினைத்துள்ளேன் என்பார்கள். ஆனால் அவர்களுடைய அந்த நினைவிலே அவர்களுடைய செயல்பாடுகளும் முடிந்துவிடும். ஒருமுறை ஒரு சகோதரன் என்னிடம் நீங்கள் எழுதும் கருத்துக்கள் யாவும் எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. அது ஆவிக்குரிய ஆகாரமாகவும் இருக்கிறது. ஆதலால் உங்கள் செய்திகள் அனைத்தையும் தொகுத்து பலபுத்தகங்களாக வெளியிட நினைக்கிறேன் என்றார். அந்த நினைவோடு

அது முடிந்தது. அடுத்து ஒரு சகோதரன் நான் உங்கள் வெளியீடுகளுக்கு ஒரு பெரிய தொகையை கொடுத்து உதவ நினைக்கிறேன் என்றார். அதன் முடிவும் அவர் நினைவோடு முடிந்தது. இவ்வாறாகப் பலர் நான் அவர்களிடம் உதவிகள் எதுவும் கேட்காமலே உதவிகள் செய்ய முன்வருவார்கள். ஆனால் தங்களுடைய வாக்குறுதிகளை காத்துக்கொள்ளமாட்டார்கள். பின்வாங்கிப்போவார்கள். திருமணத்திற்கடுத்த காரியங்களில், பெண் வீட்டாருக்கு பையன் பிடித்துவிட்டால் தங்கள் தகுதிக்குட்பட்டோ அல்லது மிகுதியாகவோ இதைச் செய்வோம், அதைச் செய்வோம் எனக்கூறி பையன் வீட்டாரை சம்மதத்திற்கு கொண்டுவருவார்கள். திருமணம் முடிந்தவுடன் வாக்கு கொடுத்ததை நிறைவேற்ற மாட்டார்கள். பையன் வீட்டார் வாக்குக் கொடுத்ததை கேட்டால், வரதட்சனைக் கொடுமை எனபொய் கூறி காவல்நிலையத்தில் புகார் செய்வார்கள். இது கொடுத்த வாக்கில் பின்மாற்றம் இல்லை. மாறாக ஏமாற்றுதல். இதை நான் என்னுடைய அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ஆனால் தாவீதோ அப்படியல்ல நினைத்தான், நினைத்ததை செய்துமுடிக்க ஆரம்பித்தான். நாமோ இப்பிரபஞ்சத்தில் நம்முடைய வாழ்க்கை வசதிகளை பெருக்கவே நினைக்கிறோம். நம்முடைய வாழ்க்கையை மேம்படுத்த நினைக்கிறோம். அதே நேரத்தில் தேவன் நமக்கு கொடுத்த ஈவுகளுக்காக அவருக்கு நன்றியாக எதையும் செய்ய முன்வருவதில்லை. முன்வந்தாலும் அதை செயல்படுத்த முடியவில்லை. ஏனென்றால் உலகம் தான் நம் உள்ளத்தில் இருக்கிறது. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆதலால் இவர்கள் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருக்கிறார்கள். (1கொரி15:19)

9. அநேகர் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தப்பின்னும் ஸ்தாபன சபைகளை ஒட்டிக்கொண்டு, அதனோடு ஒப்புரவாகி, அதனோடு ஒருமித்துப்போகிறார்கள். ஏன்? ஸ்தாபன சபைகளில் அவர்கள் பெரும் நன்மைகளுக்காகவே, பணிகளுக்காகவே, உத்தியோகங்களுக்காகவே. ஸ்தாபன சபைகள் பள்ளிகளையும், மருத்துவமனைகளையும், தொழில் ரீதியாக அநேக அலுவலகங்களைக்கொண்டு, மக்களுக்கு அதில் வேலைவாய்ப்புகளைக் கொடுத்து, அவர்களை தங்களுக்காக ஆதாயப்படுத்திக்கொள்கிறார்கள். கொத்தடிமைகளாக வைத்துக்கொள்கிறார்கள். இது யாருடைய வேலை? சாத்தானுடையது. பாருங்கள் தேவனுடைய வார்த்தை : கடைசி நாட்களில் கொடிய காலங்களில், முதன்முதலாக கூறப்பட்டுள்ளது : மனுஷர்கள் தற்பிரியர், பணப்பிரியர் (2தீமோ.3:1,2) தேவபக்தியின் வேஷத்தை தரித்தவர்கள் என கூறிகிறது.(2தீமோ.3:5) வெளியே வெள்ளை அங்கிகளுக்கு, வெள்ளை வேஷ்டி சட்டைகளுக்கு, வெள்ளை சேலைகளுக்கு குறைவு இல்லை. பொதுவாக வெள்ளை நிற ஆடைகளுக்கு குறைவே இல்லை. ஆனால் உள்ளே மாம்சத்தின் கிரியைகள் அனைத்தும் காணப்படுகிறது. (கலா 6:19-21) ஒய்யாரக்கொண்டையிலே தாழம் பூவாம் உள்ளே இருக்கிறதாம் ஈறும் பேணும் என்ற பழமொழிதான் இவர்களுக்குப் பொருந்தும். ஸ்தாபன சபை ஊழியங்கள், தனிநபர் ஊழியங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் பகல் கொள்ளைதான் நடக்கிறது. பற்பல திட்டங்களை தீட்டி மக்களை வசீகரித்து பணம் பறிக்கும் பணியைத்தான் செய்து கொண்டு வருகிறார்கள். பொதுவாக இந்த ஊழியங்கள் குறித்து நான் கேள்விப்பட்டதாவது : ஊழியத்திற்கு வருவாய் ஒரு ஆண்டிற்கு ரூபாய் ஒரு கோடி என வைத்துக்கொள்ளுங்கள். இதில் எந்த நோக்கத்திற்காக, பணிக்காக பணம் பெற்றார்களோ அந்த நோக்கத்திற்காக இந்த ஒரு கோடியில் நாற்பதாயிரம் தான் செலவாகிறது. இதர அறுபதாயிரம் வேலை செய்யும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர தேவைக்காக செலவு செய்யப்படுகிறது. ஆக இந்நாட்களில் ஊழியங்கள் அனைத்தும் வேலைவாய்ப்புகளைக் கொண்ட ஒரு தொழிலாக நடைப்பெற்று வருகிறது. ஒருவர் தன்னுடைய வருமானத்திற்காக ஒரு ஊழியத்தை தொடங்கி அதில் மக்களை வசீகரித்து தன்னுடைய ஜீவனத்திற்கு தேவையானவைகளை அவர்கள் வாயிலாக சவதரித்துக் கொள்கிறார். இப்படியாக தொழில் ரீதியில் ஊழியங்கள் பெருகுகின்றன. இந்நாட்டில் அநேக ஸ்தாபனங்கள் குறிப்பாக இயேசு அழைக்கிறார். அசெம்பிளி ஆப் காட், தென்னிந்திய திருச்சபை போன்றவைகள் கிறிஸ்துவ திருமண தகவல் மையங்கள் என்ற பெயரில் பணம் சம்பாதிக்க, நல்ல வருமானம் உள்ள இந்த தொழிலை ஆரம்பித்து விட்டார்கள். இதில் ஒரு நல்ல வருமானம் உண்டு என்பதை நான் என் அனுபவத்திலிருந்து கண்டுக்கொண்டேன். ஒரு பக்கம் சேவை என்ற பொய். மறுபக்கம் தொழில். முதலாவது இவர்களிடம் ஆண் / பெண் பெயர் மற்றும் விவரங்கள் பதிவு செய்ய ஒரு தொகை. பின் அவர்கள் ஊழியத்திற்கு ஒரு தொகை ஆயிரத்தில், அதன்பின் திருமணம் முடிந்தால் ஸ்தோத்திர காணிக்கை ஒரு சதவீதத்தில். இதன்பின் அவர்கள் வெளியிடும் பத்திரைகைக்கு ஒரு சந்தா. இப்படியாக ஒரு நல்ல தொழில் இந்நாட்களில் அநேக சபைகளில் நடந்து வருகிறது. ஆக சபைகள் / ஊழியர்கள் இந்நாட்களில் பணப்பிரியராக பற்பல உபாயத்தந்திரங்களை ஊழியத்தின் பெயரில் தெரிந்துக்கொண்டு பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த உபாயத்தந்திரங்களை தெரிந்துக் கொள்வதற்காகத்தான் அவர்களது M.BA., படிப்பு உதவுகிறது. வெளியே தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு, உள்ளே ஓநாயாக இருக்கிறார்கள். ஆக இன்றைய ஸ்தாபன சபைகள், ஊழியக்காரர்களில் அநேகர் இயேசு கிறிஸ்துவுக்குரியவைகளை தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள். (பிலி2:21) அவனவன் தனக்கானவைகளையே தேடுகிறான். பிறனுக்கானவைகளை தேடுவதில்லை. (பிலி2:4, 1 கொரி10:24) ஒவ்வோரு ஸ்தாபன சபைகளும் ஒவ்வொரு தொழிலைச் செய்யும் தொழிற்கூடங்களாக மாறிவிட்டன. இந்த தொழிற்கூடங்களில் மக்களுக்கு வேலைவாய்ப்பு. ஆதலால் மக்கள் அதை நாடுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் முதுகுக்கு பின்னால் எறியப்பட்டுவிட்டது. மாயை எல்லாம் மாயை. கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் என்பதின் பேரில் பற்பல ஸ்தாபன சபைகளின் வேலைபாடுகளை கவனித்தேன். சூரியனுக்கு கீழே அவர்களால்

செய்யப்படுகிற காரியங்களை எல்லாம் கவனித்துப் பார்த்தேன் : இதோ எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. கோணலானதை நேராக்கக்கூடாது என உணர்ந்தேன்.

10. ஆனால் தேவனோ அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு சரீரத்தை அமைத்திருக்கிறார். (1கொரி12:25-27) ஆனால் நாமோ சுயநலவாதிகளாக இருந்துக்கொண்டு நமக்கானவைகளை மாத்திரமே தேடுகிறோம். மணவாட்டி, மணவாட்டி என மார்புத்தட்டிக்கொண்டு, வீண் பெருமைப்பாராட்டித்திரியும் மக்களையும் கவனித்தேன். அனைவருக்குள்ளும் சுயநலமே. உலகம்தான் அவர்களது உள்ளத்தில் இருக்கிறது. நான், என் குடும்பம் என் உறவினர்கள் என்ற சுயநலமே சபைகளில் காணப்படுகிறது. தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள். நீ உனக்கானவைகளை மாத்திரமே தேடும்வரை நீ கிறிஸ்துவின் கரத்தில் இல்லை. ஆதலால்தான் பெரும்பான்மையான கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இல்லை என்பதை மிக்க உறுதியுடன் கூறுகிறேன். எங்கும் மாயையான சகோதர சிநேகம் எனது 38 ஆண்டுக்கால ஊழியத்தில் எங்கும் மாயையான சகோதர சிநேகத்தையே காண்கிறேன். எந்த சகோதரனையும் நம்ப முடியவில்லை.

11. இப்பொழுது தாவீதுக்கடுத்த காரியங்களுக்கு வருவோம். அவனுடைய மனதில் நேர்மை, உத்தமம், சுயநலமின்மை இருந்தது. நான், என் மனைவி, என் பிள்ளைகள், எனது உறவினர், எனது சகோதர சகோதரிகள் இப்படிபட்டதான ஒரு குறுகிய வட்டத்திற்குள் அவன் இல்லை. இன்று பெரும்பான்மையான கிறிஸ்துவ சமுதாயத்தில் ஊழியங்கள், சபைகள் யாவும் இந்த குறுகிய வட்டத்திற்குள்தான் உள்ளனர். தங்கள் வாரிசுகளைத்தான் எங்கும் எதிலும் முன் நிறுத்துகிறார்கள். இதிலிருந்து அவர்களுடைய ஊழியம் தேவனிடத்திலிருந்து அவர்கள் பெற்றதில்லை என தெரிகிறது. இவர்கள் தங்களுக்கென்று ஒரு ஊழியத்தை தெரிந்துக் கொண்டு தங்கள் குடும்பத்தை ஆதரிக்கிறார்கள். தாவீது தான் மாட மாளிகையில் வாழ்ந்துக்கொண்டு, தேவனுடைய உடன்படிக்கை பெட்டி திரையின்கீழ் இருப்பதால் தன் மனதில் வாதிக்கப்பட்டான், தன் இருதயத்தில் குத்தப்பட்டான். இது ஒரு அக்கிரமச்செயல் என்று தன் உள்ளத்தில் உணர்ந்தான். ஆதலால் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நினைத்தான். ஆயத்தம் செய்தான், செயல்பட்டான். நாம் ஒழுங்காக சபை கூடுதலுக்குச்செல்ல வேண்டும் என்ற முடிவு எடுப்போம். ஆனால் ஞாயிறு அன்று அவசரம் எனக்கூறி இதர வேலைகளில் ஈடுபட்டு சபை கூடுதலை விட்டுவிடுவோம், அன்றுதான் ஒரு நபரை சந்திக்கச் செல்வோம், அன்றுதான் ஒரு விருந்துக்கு செல்லவேண்டியதாயிருக்கும். அன்றுதான் ஒரு பிரயாணத்தை தொடங்கவேண்டியதாயிருக்கும். இப்படியாக உலக பிரகாரமான காரியங்கள் நம்மை மேற்க்கொள்ளும். சபைகூடுதலுக்குச் செல்லுதல் தடைப்படும். சபைகூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விடக்கூடாது என எபி10:25 ல் வாசிக்கிறோம். இனி நகை அணியக்கூடாது என்று ஒரு முடிவெடுப்போம். பின் அதில் ஒரு மனமாற்றம் வந்து சபைக்கு போகும்போது மாத்திரம் நகை அணிய வேண்டாம், சபைக்கு வெள்ளை ஆடையுடன் நகை ஒன்றும் அணியாமல் செல்லுவோம். இதர ஆறு நாட்கள் கலர் ஆடைகள் அணிந்து, நகைகள் அணிந்துக் கொண்டு வேலைக்குச் செல்வோம் என்ற மனமாற்றத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்துவிடுவோம். இந்த மாதம் முதல் ஒழுங்காக கர்த்தருக்குரிய தசமபாகத்தை செலுத்தவேண்டும் என முடிவு எடுப்போம். ஆனால் அந்த மாதம் உறவினர் வீட்டில் ஒரு கலியாணத்திற்கு செல்ல வேண்டியது வரும். கலியாண செலவுக்கு முக்கியத்துவம் கொடுத்து கர்த்தருக்குரிய தசமபாகத்தை திருடிவிடுவோம். இப்படியாக நம்முடைய சிந்தனைகளும், செயல்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவே காணப்படும். நம்முடைய விசுவாசத்திற்கேற்றவாறு, நம்முடைய தீர்மானத்திற்கேற்றவாறு நம்முடைய கிரியைகள் இல்லை. ஒன்றுக்கொன்று எதிர்மாறாகவே இருக்கிறது. நம்முடைய எண்ணங்கள் யாவும் நலமானதாக இருக்கும். ஆனால் நம்முடைய நடத்தைகள் யாவும் அதற்கு எதிராக இருக்கும். என் மாம்சத்தில் நன்மை வாசமாய் இருக்கிறதில்லை என்று நான் அறிந்திருக்கிறேன். நன்மை செய்ய வேண்டும் என்ற விருப்பம் என் மனதில் இருக்கிறது. ஆனால் நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை. நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால் நான் அல்ல எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படி செய்கிறது. (ரோ. 7:18-20) நம்முடைய விசுவாசத்தை நம்முடைய கிரியைகள் பிரதிபலித்துக் காட்டமுடிவதில்லை. ஆனால் தாவீதின் எண்ணமும், செயலும் ஒன்றாகவே இருந்தது. தன் வாஞ்சையை, விருப்பத்தை, விசுவாசத்தை தன் செயலில் காட்டினான். அவனிடம் விசுவாசம், அத்துடன் கிரியை இருந்தது. (யாக்.2:22) பாருங்கள். கிரியைகளினாலே மாத்திரமே விசுவாசம் பூரணப்படும். கிரியையில்லாத விசுவாசம் செத்தது (யாக்2:20-22).

12. அடுத்து தாவீது தேவனுடைய நாமத்திற்கென்று ஒர் ஆலயம் கட்ட தனது உள்ளத்தில் உள்ள எண்ணத்தை தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம் கூறுகிறான். (1நாளா.17:1) ஏன்? தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிகளுக்கு மாத்திரமே வருகிறது. உங்கள் மத்தியில் உள்ள பிஷப், சபைத்தலைவர்கள், இண்டர்நேஷனல் பிரசங்கிகள், தலைமை போதகர்களுக்கு வருவது இல்லை. ஏனென்றால் கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியர்களுக்கு தமது ரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். (எண்12:6, 2நாளா36:12, ஆமோஸ்3:7) அவர்கள் தீர்க்கதரிசிகளாயிருந்து, அவர்களிடத்திலே கர்த்தருடைய வார்த்தையிருந்தது. (எரே27:18) தேவனுடைய வார்த்தை ராஜாவாகிய தனக்கு வராது, அது தீர்க்கதரிசிகளுக்கே வரும் என்பதை அறிந்தவனாய்

தாவீது நாத்தானை சந்திக்கிறான். ஆக தாவீது நாத்தானிடம் சென்று தன் எண்ணம் குறித்து தேவனுடைய வார்த்தையை அறிய விரும்பினான். தன் விருப்பம் குறித்து தேவனுடைய சித்தத்தை அறிய விரும்பினான். தன் மனபாரம் குறித்து தேவனுடைய ஆலோசனையை அறிய விரும்பினான். இப்பொழுது தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிகளுக்கு தரிசனம் மூலம் வெளிப்படவேண்டும். தரிசனம் என்றால் என்ன? இது ஒரு மனிதன் தூங்கிக்கொண்டிருக்கும்போது காணும் கனவு, சொப்பனம் இல்லை. மாறாக இது ஒருவனுடைய ஐம்புலன்களும் தங்கள் தங்கள் பணியை செய்துக்கொண்டிருக்கும்போது அந்த வேளையில் ஒருவன் காணும் ஒரு காட்சி. அது அவன் கண்முன் தோன்றும் ஒரு காட்சி. தேவனுடைய மனிதர்கள் பிரசங்கித்துக் கொண்டிருப்பார்கள், அந்த வேளையில் அவர்கள் கண்முன் ஒரு காட்சி வரும். அதன்படி அவர்கள் செயல்படுவார்கள். ஆனால் இன்று கர்த்தர் உரைக்கிறதாவது என்று கூறி நம்முடைய தீர்க்கதரிசிகள் தாங்கள் யூகித்ததை, கண்ட சொப்பனத்தை தீர்க்கதரிசனமாக கூறுகிறார்கள். ஆதலால் அதில் அவர்கள் தோல்வியை கண்டடைகிறார்கள். ஆனால் ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடைப்பெற வேண்டும். (உபா.18:22)

13. அடுத்து என்ன நடக்கிறது? தீர்க்கதரிசியாகிய நாத்தான், தாவீது ராஜாவிடம் உம்முடைய இருதயத்தில் இருக்கிறது எல்லாம் செய்யும், தேவன் உம்மோடு இருக்கிறார் என்றான். (1நாளா17:2) ஆனால் இது தேவனுடைய சித்தம் அல்ல. இங்கு தீர்க்கதரிசி தேவனுடைய சித்தத்தை பிரதிபலிக்கவில்லை. ஏனென்றால் இது குறித்து தீர்க்கதரிசி தேவனிடத்தில் எதுவும் கேட்கவில்லை. அவரும் தரிசனத்தின் வாயிலாக தீர்க்கதரிசியோடு இடைபடவில்லை. பாருங்கள் ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையின்படியே கூறவேண்டும். மற்றும் தான் கண்ட தரிசனத்தின்படியே கூற வேண்டும். (1நாளா17:15) இங்கு தீர்க்கதரிசி தேவனிடத்தில் கேட்கவில்லை. தேவனும் தீர்க்கதரிசியோடு இடைபடவில்லை. தீர்க்கதரிசி தன் யூகத்தின்படியே கூறினான். இதை ஆங்கிலத்தில் நாம் Human Judgment என்று கூறலாம். அதாவது நடந்த பல காரியங்களை மனதில் கொண்டு நடக்கப்போகும் காரியங்களை யூகித்துச் சொல்வது. இதுதான் இன்று நம் தீர்க்கதரிசிகளின் மத்தியில் நடக்கிறது. சகோ பிரன்காம் இதற்கு விதிவிலக்கல்ல. அவரும் இந்த உலகம் 1977 ல் ஒரு முடிவுக்கு வரும் என்றார். அது கடந்த சம்பவங்களைக் கொண்டு தீர்மானித்த அவருடைய ஒரு யூகமாக இருந்தது. தேவன் அவரிடம் பேசியது இல்லை. ஆதலால் அது நிறைவேறவும் இல்லை. ஆதலால் அவர் ஒரு கள்ளத்தீர்ககதரிசி என்றும் கூற முடியாது. சகோ பிரன்காம் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாக இருப்பாராகில் நாத்தானும் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாகிவிடுவான். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? சில வேளையில் தீர்க்கதரிசிகள் தங்கள் யூகத்தை கூறுகிறார்கள். அவர்கள் கர்த்தர் உரைக்கிறதாவது என்று கூறவில்லை. கர்த்தர் உரைக்கிறார் என்று கூறினால் தான் கர்த்தர் கூறியதை அவர்கள் கூறினார்கள் என்று பொருள்படும். இங்கு தேவன் தீர்க்கதரிசியினுடைய யூகத்தை திருத்துகிறார். பொதுவாக தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஸ்தானபதிகள். அதேவேளையில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் நம் மத்தியில் உண்டு. (மத் 24:24) அதை நாம் மறந்துவிடக்கூடாது. சிலர் நம் மத்தியில் தீர்க்கதரிசி என்கிற அடைமொழியை தங்களது பெயருக்கு முன்போ பின்போ போட்டுக்கொள்கிறார்கள். உண்மையில் அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளே.

14. இப்பொழுது கர்த்தர் நாத்தான் கொண்டிருந்த யூகத்தை / கருத்தை அன்றே திருத்துகிறார். அன்று இரவே தேவனுடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாயிற்று. (1நாளா17:3) இப்பொழுதுதான் தேவனுடைய வார்த்தை நாத்தானுக்கு வருகிறது. இதிலிருந்து தாவீது நாத்தான் சந்திப்பு பகல்வேளையில் நடந்திருக்கிறது. தேவனுடைய நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்ற விருப்பம் தாவீதின் இருதயத்தில் இருந்தது. அது நல்லதுதான். (2நாளா6:8) ஆனால் தாவீது ஆலயத்தைக் கட்ட மாட்டான். (1நாளா17:4, 2நாளா6:9) அவன் கர்ப்பப்பிறப்பாகிய அவனுடைய குமாரனே ஆலயத்தைக் கட்டுவான். இதுவே தேவனுடைய தீர்மானம். (1நாளா17:11,12, 2நாளா6:9) இங்கு தாவீது நினைத்தது ஒன்று. ஆனால் தேவனுடைய சித்தத்தின்படி நடக்கப்போகிறது ஒன்று. முந்தினது சுயசித்தம் ஒரு தீர்க்கதரிசியின் யூகம். ஆனால் பிந்தினது தேவசித்தம். நமது தினசரி வாழ்க்கையிலும் சுயசித்தம் - தேவசித்தம் நிறைவேறுகிறதைக் காண்கிறோம்.

15. கவனியுங்கள். தாவீது ஒரு சங்கீதக்காரன், ஒரு பராக்கிரமசாலி, ஒரு யுத்தவீரன், ஒரு காரிய சமர்த்தன், சௌந்தர்யமுள்ளவன், சிவந்த மேனியுடையவன், அழகிய கண்களையுடையவன், நல்ல ரூபமுள்ளவன். இவன் யூதா வம்சத்தின்மேல் ராஜா. எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் அவனோடுகூட இருந்தார். (1சாமு16:18) ஆனாலும் ஆலயத்தைக்கட்ட தேவன் அவனை அனுமதிக்கவில்லை. இந்நாட்களில் அநேகர் கர்த்தருக்கடுத்த ஊழியத்தை தாத்தா, பாட்டி : தந்தை, தாய் : குமாரன், குமாரத்தி : மருமகன், மருமகள் : பேரன், பேத்தி என வம்ச வரலாற்றில் அனைவருமாக செய்துவருகிறார்கள். இது தேவசித்தம் இல்லை. நிச்சயமாக அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு மாறாக தேவனுக்கென்று ஒரு ஊழியத்தைச் செய்து வருகிறார்கள். மக்களை ஏமாற்றுகிறார்கள். இவர்கள் பொருளாசையில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள். அவர்கள் தங்கள் சாதூரியமான பேச்சினால் உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய் பிடித்துக்கொள்கிறார்கள். இவர்கள் செம்மையான வழியைவிட்டு தப்பி நடந்த பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றிப்போனவர்கள். இந்நாட்களில் இயேசுவின் பெயரில் அநேக ஊழியங்கள் இந்த வழியில்தான் செயல்பட்டு வருகிறது. அரசியலைப் போன்று குடும்பவாரிசுகள் சபைகளிலும். எதற்கு? சபை ஸ்தாபனத்தின் பெயரில் கொள்ளையடித்தப் பணத்தை தக்கவைக்க. கள்ளத்தராசினால்

சம்பாதித்த சொத்துக்கள் தன் குடும்பத்தைவிட்டு கைமாறாதிருக்க. ஆக தாவீதுக்கு கர்த்தருடைய நாமத்திற்கென ஒரு ஆலயத்தைக்கட்ட சகல தகுதிகள் இருந்தாலும் அவன் கட்டுவது தேவனுடைய சித்தம் அல்ல. இந்நாட்களில் அநேகர் ஊழியம் செய்வதும், கர்த்தருடைய சித்தம் இல்லாவிட்டாலும், தேவ சித்தத்திற்கு மாறாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்வது தேவனுடைய சித்தம் அல்ல. இரு மனைவிகளை உடையவர்கள், தாய் தந்தை என்ற நிலையில் இல்லாதவர்கள், திருமணம் ஆகாதவர்கள், இரட்சிக்கப்பட்ட மனைவி மக்களையுடையவரல்லாதவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு மாறாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். ஒருவன் தேவனுடைய அழைப்பின்படி ஊழியம் செய்யவேண்டும். (ரோ1:1) ஒருவன் தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கென்று ஊழியம் செய்யவேண்டும். (1கொரி1:1) ஒரு ஊழியக்காரனுடைய அழைப்பும் தெரிந்துக்கொள்ளுதலும் உறுதிப்படுத்தப்படவேண்டும். எதனால்? தேவனுடைய வார்த்தையினால் (2பேது1:10)

16. தேவன் அவருக்கென்று ஒரு ஆலயத்தைக்கட்ட தாவீதை அனுமதிக்காவிட்டாலும், தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதைக்குறித்து அவனுடைய வாஞ்சையை பாருங்கள்.

(அ) கர்த்தருக்கு கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியும், மகிமையும் உடையதாய் விளங்கும்படி மகா பெரியதாக இருக்கவேண்டும். (1நாளா22:5) நாமோ, நாம் கட்டப்போகும் வீட்டைக்குறித்துதான் இவ்வாறு வாஞ்சிக்கிறோம்.

(ஆ) எங்கள் தேவன் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர். ஆதலால் நான் கட்டப்போகும் ஆலயம் பெரிதாக இருக்கவேண்டும். (2நாளா2:5) இது அவன் தேவன்மேல் கொண்டிருந்த பக்தி வைராக்கியத்தைக் காட்டுகிறது. இன்றைய வைராக்கியங்கள் எல்லாம் தேவன் பேரில் இல்லாமல், தேவ சித்தத்திற்கு புறம்பாக ஊழியம் செய்யும் அவருடைய ஊழியக்காரர்கள் அல்லது ஸ்தாபன சபைகளைச் சார்ந்து ஊழியம் செய்யும் ஊழியர்கள் மேல் இருக்கிறது. அவர்கள் சார்ந்துள்ள சபையின் மேலும் பக்தி வைராக்கியம் உண்டு.

(இ) நான் கட்டப்போகும் ஆலயம் பெரிதும், ஆச்சரியப்படத்தக்கதாக இருக்க வேண்டும். (2நாளா2:9) நாமோ நமது ஊழியத்தின் பாதையில் தேவனுடைய நாமத்தை மேன்மைபடுத்துவதற்குப் பதிலாக நம்முடைய நாமத்தையே பிரஸ்தாபப் படுத்துகிறோம். எனது ஊழியம், எனது சபை, நான் சபை ஸ்தாபகர், நான் பிரதான பாஸ்டர், நான் பிஷப் என தங்களை தாங்களே மேன்மைபடுத்திக் கொள்கிறார்கள். தாவீதுக்கு இருந்த வாஞ்சை உங்களிடத்தில் காணப்படுகிறதா? உங்களை நீங்களே சீர்தூக்கிப்பார்த்து அறியுங்கள். உங்களுக்கு தேவனுடைய வார்த்தை மீது, இந்த சபைகாலத்து செய்தி மீது ஆத்துமதாகம், வாஞ்சை உண்டா? நீ அறிந்த சத்தியத்தை பிறருக்கு எடுத்துக்கூறும் ஆத்தும ஆதாயத்தாகம் உன் உள்ளத்தில் உண்டா? தேவனுடைய வார்த்தை / இக்காலத்திற்குரிய செய்தியை எடுத்துச் செல்லும் ஊழியர்களுக்கு உதவும் கரங்கள், ஆதரிக்கும் கரங்கள் உங்களிடத்தில் உண்டா? திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன், உபதேசிக்கிறவனுக்கு சகல நம்மைகளிலும் பகிர்ந்துக் கொடுக்க கடவன். (கலா6:6) ஞான நன்மைகளை விதைக்கிறவன் சரீர நன்மைகளை அறுத்தால், அது பெரிய காரியமா? (1கொரி9:11) சுவிசேஷத்தை அறிவிக்கிறவனுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டு. (1கொரி9:14) ஆனால் நீங்கள் இதை செய்யவும் மாட்டீர்கள். செய்கிறவர்களை செய்ய விடவும் மாட்டீர்கள். கர்த்தருடைய பணிக்கு உங்கள் கழுத்தை நீங்கள் கொடுக்கிறதும் இல்லை. ஒருவன் அதை செய்தால் அவனுக்கு மனமடிவை உண்டாக்குவதையே உங்கள் பணியாக கொண்டுள்ளீர்கள். நெகே. நான்காம் அதியை தியானியுங்கள். சிலவேளைகளில் என்னிடம் சிலர் என்ன சகோதரனே, கொஞ்சம் பெரிய எழுத்தில் புத்தகத்தை போட்டால் என்ன? வரிக்கு வரி நன்கு இடம் விட்டால் என்ன? மற்றவர்களைப்போல் புத்தகவடிவில் சிறிய அளவு பேப்பரில் போட்டால் என்ன என்பார்கள். ஆலோசனைகளுக்கு மட்டும் குறைவு இல்லை. ஆனால் அதனால் உண்டாகும் அதிகப்பட்சமான செலவுகளுக்கு உதவ முன்வருவார்களா என்றால், வரமாட்டார்கள்.

17. தாவீது ஆலயத்தைக் கட்டுவது தன் பணியல்ல, ஆலயம் கட்ட தான் கொண்டிருந்த வாஞ்சை தேவனால் நிராகரிக்கப்பட்டது என்பதை அறிந்திருந்தும், தேவனுடைய ஆலயத்தின் மேல் அவன் கொண்டிருந்த வாஞ்சையினால் ஆலயம் கட்டத்தேவையான பொருட்களை தன் மரணத்திற்கு முன்பே திரளாய் சவதரித்து வைத்தான். (1நாளா22:5) இந்நாட்களில் மணவாட்டி மணவாட்டி என போலி வேஷம் போடுகிறார்களேயன்றி, உண்மையிலே அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி அல்ல. ஏனென்றால் அவர்களில் ஒருவர் ஊழியத்தை மற்றொருவர் தாங்குவது இல்லை. கர்த்தருக்குரிய தசமபாகத்தை பண்டகசாலைக்கு கொண்டுவருவது இல்லை. மாறாக பாஸ்டரிடம் சென்றுக் கொடுக்கிறார்கள். சபை பாஸ்டர் சபையாகிய பண்டக சாலைக்கு அதிகாரி கிடையாது. கர்த்தருக்குரிய தசமபாகத்தை அநேகர் கொண்டு வருவது இல்லை. காரணம்? தனக்கே தன் வருமானம் போதவில்லை என்பதே. ஆனால் மணவாட்டி தன் திராணிக்கு மிஞ்சி கொடுக்கிறவளாகவே இருக்கிறாள். நாம் கொடுப்பதற்கு மேலாக தேவன் நமக்கு தருவார் என்ற விசுவாசம் தேவை. தன்னிடம் இல்லையே இல்லையே என்ற பஞ்சப்பாட்டுக் கூடாது. கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சை உள்ளவர்கள் எல்லாவற்றையும் பகுத்தறிந்து, யாருக்கு கொடுக்க வேண்டும் என்ற அறிவு இல்லாமல், கள்ளகபட முள்ள ஆட்களுக்கு கொடுத்து, கர்த்தருக்குரியதை தண்ணீரில் போட்டு பலன் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இங்கு தாவீது பிறருடைய ஊழியத்தை தாங்குகிறான். அதற்கு தன்னால் இயன்ற மட்டும் பொருட்களை சவரித்தான். (1நாளா29:2) தேவனுடைய ஆலயத்தின் மேல்

வைத்திருந்த வாஞ்சையினால் தான் சவதரித்ததோடு மட்டுமல்ல, தனக்கு சொந்தமானவைகளையும் கொடுத்தான். (1நாளா29:3) இந்நாட்களில் பிறருடைய பணத்தில்தான் ஊழியம் செய்கிறார்கள். அதிலும் கொள்ளையடிக்கிறார்கள். தங்கள் பணத்தை வங்கிகளில் சேமித்துக்கொண்டே தங்கள் வாரிசுகளுக்கு சொத்து சுகங்களை சவதரித்துக்கொண்டே வருகிறார்கள். பாருங்கள் தாவீது தன் சிறுமையில் கொடுத்தான். (1நாளா22:14) எல்லாம் உம்மால் உண்டானது. எல்லாவற்றையும் உமது கரத்திலிருந்து வாங்கினோம். உமக்கு கொடுக்கிறோம் என்ற பரந்த மனப்பான்மையுடன் கொடுத்தார்கள். (1நாளா29:14) ஆனால் நம்முடையவர்கள் இம்மைக்குரிய நன்மைகளுக்காகவே கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். கள்ளகபடமுள்ள வேலையாட்களும் விசுவாசிகளிடம் நீங்கள் எனக்கு ஆயிரம் கொடுத்தால் கர்த்தர் உங்களை பலமடங்கு ஆசீர்வதிப்பார் என்று இனிமையான மொழியில் வஞ்சகமாகக் கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள். அவ்வாறாக சிலர் கொடுத்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டதாக கள்ளசாட்சிகளை பிரசுரிக்கிறார்கள். எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது. தேவனுடைய கரத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்களேயன்றி தேவனுக்குரியதை தேவனுக்கு கொடுக்க வேண்டும் என்பது குறித்து சிந்திப்பது இல்லை. ஆதலால் தான் கர்த்தர் மனுஷன் தேவனை வஞ்சிக்கிறான். எதனால் என்றால் கர்த்தருக்குரிய தசமபாகத்திலும் காணிக்கையிலும் தானே என்கிறார். (மல்3:8) அன்றைய விசுவாசிகளைப் பாருங்கள். அவர்கள் மனப்பூர்வமாய் அள்ளிக்கொடுத்தார்கள். உத்தம இருதயத்தோடு கொடுத்தார்கள். உற்சாகமாய் கொடுத்தார்கள். சந்தோஷத்தோடே கொடுத்தார்கள். (1நாளா29:9, 2கொரி8:2,3) இவர்கள் யாவரும் தேவனிடமிருந்து இம்மைக்குரிய நன்மைகளை எதிர்ப்பார்த்து அவருக்கு கொடுக்கவில்லை. (1கொரி15:19) இந்த ஊழியக்காரனுக்கு, கர்த்தருடைய ஊழியத்திற்கென்று ரூ.10,000/- கொடுத்தேன். கர்த்தர் அதை எனக்கு ரூ1,00,000/-மாக திருப்புக் கொடுப்பார் என்ற எதிர்பார்ப்போடு அல்ல. கொடுத்தார் என போலி சாட்சிகளைக் கொண்டு கள்ளகபடமுள்ள வேலையாட்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள். இன்று உங்கள் மத்தியில் பிரபலமாக உள்ள ஊழியர்கள் எல்லாம் மாயையான வழியில் பணம் சம்பாதிப்பவர்களே. இவர்கள் பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யைச் சொல்லி ஏமாற்றுகிறார்கள். இங்கு எனக்கு ஒரு வேதப்பூர்வமான சம்பவம் ஞாபகத்தில் வருகிறது. எலிசாவை சூனேமியாள் தேவனுடைய மனுஷன், பரிசுத்தவான் என்று கண்டு, அதன்பின் தான் அவனை உபசரித்தாள். அவளுக்கு உதவிசெய்ய எலிசா விரும்பினான். அவள் நான் என் ஜனத்தின் மத்தியில் சுகமாயிருக்கிறேன் என்றாள். ஆனால் அவளுக்கு ஒரு அத்தியாவசியமான தேவை இருந்தது. அவளுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அவள் அந்த பாரத்தை கர்த்தர் மீது வைத்துவிட்டாள். ஆதலால் தனக்கு குறை எதுவும் இல்லை என்றாள். குறைவை குறைவாக அவள் காட்டிக்கொள்ளவில்லை. (2ராஜா 4அதி) அவள் மனப்பூர்வமாக தேவனுடைய மனுஷனுக்கு பணிவிடை செய்தாள். அதற்குரிய பலனை அவள் எதிர்பார்த்து செய்யவில்லை. இவள்தான் உண்மையான விசுவாசியின் அடையாளம்.

18. அந்நாட்களில் புதிய ஏற்பாடு சபைக்காலத்து விசுவாசிகளை பாருங்கள். அவர்கள் தங்கள் திராணிக்கு மிஞ்சிக்கொடுத்தார்கள். (2கொரி8:3) அதாவது தங்கள் தகுதிக்கு மிஞ்சிக்கொடுத்து ஊழியங்களைத் தாங்கினார்கள். ஊழியக்காரர்களைத் தாங்கினார்கள். இல்லை இல்லை என்ற பல்லவியைப் பாடாமல் உண்டு உண்டு என்றே பாடினார்கள். பாருங்கள் அந்த விதவை தனது ஜீவனத்துக்குரிய அனைத்தையும் போட்டுவிட்டாள் (லூக்21:4) அதன்பின் தேவன் அவளை பட்டினியாய் போட்டாரா? நிச்சயமாக இல்லை. சாறிபாத் ஊர் விதவையை போஷித்த தேவன் இந்த விதவையையும் போஷித்திருப்பார். ஏனென்றால் அவள் கர்த்தரை நம்பினாள். (எரே49:11) உன்னை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைப்பவளே உன்னை நீயே சீர்தூக்கிப்பார். உனக்கு தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் மனப்பான்மை உண்டேயன்றி தேவனுக்கும், அவருடைய உண்மையான ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. மேலும் மணவாட்டி ஊழியம் என்று கூறிக்கொண்டு, ஊர் சுற்றிக்கொண்டு தங்கள் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொண்டிருக்கிறார்களேயன்றி மற்றபடி அல்ல. உடம்பில் தெம்பு இருந்தும் உழைக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை. உடம்பை வளைக்காமல், சோம்பேறியாய் வாழ்ந்தே தங்கள் வயிற்றுப்பிழைப்பை சமாளித்து, சரிப்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டு வருகிறது. விசுவாசிகள் கர்த்தருக்குரிய தசமபாகத்தையும், காணிக்கையையும் திருடுகிறார்கள். ஊழியக்காரர்களும் விசுவாசிகளுடையதை திருடுகிறார்கள். ஆக ஒருவரை ஒருவர் திருடுகிறார்கள். இதுதான் இன்றைய மணவாட்டி ஊழியம். பொதுவாக நான் பார்த்ததாவது : விசுவாசிகள் திருவசனத்தை உபதேசிக்கிறவனுக்கு கொடுப்பது இல்லை. (கலா6:6) அவ்வப்போது நூதனமான உபதேசத்தைக் கொண்டு வருகிறவர்களையே கனம் பண்ணுகிறார்கள். சிலர் எங்கள் பாஸ்டர் தவறு செய்கிறார். ஆனாலும் அவரை விட்டு வெளியே வர மனமில்லை என்கிறார்கள். ஏனென்றால் அவருடைய தவறுகளுக்கு இவர்களும் உடந்தையாக இருக்கிறார்கள். அடுத்து ஞான நன்மைகளை விதைக்கிறவனுக்கு சரீர நன்மைகளை கொடுப்பது இல்லை. (1கொரி9:11) என்னிடம் சில வேளைகளில் பல இடங்களிலிருந்து விசுவாசிகள், ஊழியர்கள் உதவிக்கேட்டு வருகிறார்கள். ஆனால் வெறுமையாய் திரும்பி போகிறார்கள். அது எனது மனதுக்கு கஷ்டமாகயிருக்கிறது. ஏனென்றால் எனக்கு எனது ஊழியத்தின் பாதையில் எந்தவிதமான வழியிலும் வருமானம் கிடையாது. யாரும் எனக்கு தசமபாகமோ காணிக்கையோ கொடுப்பதில்லை. ஏனென்றால் நான் சத்தியத்தை சொல்லுவதால், எழுதுவதால், பிரசங்கிப்பதால் அனைவராலும் பகைக்கப்படுகிறேன். அவர்கள் என்னை சத்ருவாக நினைக்கிறார்கள். என் ஊழிய செலவுக்காக நான் என் பிள்ளைகளை கொள்ளையிடுகிறேன். தகப்பன் என்ற

முறையில் அவர்கள் என்னை போஷிக்கிறார்கள், பராமரிக்கிறார்கள், தகப்பனுக்கு கர்த்தர் கொடுத்த ஊழியத்தைத் தாங்குகிறார்கள். ஒருமுறை ஒரு சகோதரி என் வீட்டிற்கு அவர் சார்ந்திருக்கும் ஸ்தாபனத்தின் வெளியீடு எனக்கு வருவதால், காணிக்கை / சந்தா வாங்க என்னிடம் வந்திருந்தார்கள். அப்பொழுது நான் அனுப்பவேண்டிய இயேசுவே வாரும் தபாலில் சேர்க்கவேண்டிய நிலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் என்னிடம் காணிக்கை கேட்டபோது, என்னிடம் பணம் இருந்தால் இங்கு இவைகளை அடுக்கி வைத்திருக்க மாட்டேன். அவைகள் தபாலுக்கு சென்றிருக்கும் என்றேன். அதன்பின் என் ஊழியக்காரியங்களை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். உடனே அவர்கள் எனக்கு ஒரு காணிக்கையாக ஸ்டாம்புகள் வாங்க கொடுத்தார்கள். ஆனால் நான் அதை வாங்க மறுத்துவிட்டேன். என்னுடைய ஊழியத்தின் பாதையில் எனது மனைவி பிள்ளைகள் யாவரும் கர்த்தருடைய கிருபையினால் எனக்கு ஒத்தாசையாக இருப்பதினால் நான் இதை தொடர்ந்து இந்த பணியை செய்துக்கொண்டிருக்க முடிகிறது. எனக்கு விசுவாசிகளிடமிருந்தும், என்னிடமிருந்து ஞான நன்மைகளை பெறுகிறவர்களிடத்திலிருந்தும் உதவிகள் கிடையாது. ஆதலால் வருமானம் இல்லாத நான் பிறருடைய ஊழியத்தை தாங்க முடியவில்லை. ஆதலால் தயவு செய்து ஞான நன்மைகளுக்காக என்னிடம் வாருங்கள், சரீர நன்மைகளுக்காக அல்ல என்று கூறிவிடுவேன். அடுத்து மணவாட்டி என்பவர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிறவர்களுக்கு கொடுப்பது இல்லை. அவனுக்கு சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டே. (1கொரி9:4) பொதுவாக கர்த்தருக்குரிய தசமபாகம் தவறான நபர்கள் கைக்கு சென்று விடுவதால் அது ஏனைய ஊழியர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படுவது இல்லை. சபை பாஸ்டரை காக்கா பிடிக்க வேண்டும், அவருக்கு துதி பாட வேண்டும், அவர் தயவு இருந்தால் மட்டும் அவரிடமிருந்து சில நன்மைகளை இதர ஊழியர்கள் பெற முடியும் என்ற நிலை உள்ளது. ஆக மணவாட்டி என்று உங்களை அழைக்கும் பாத்திரங்களே, நீ தேவனுக்கென்று ஒன்றையும் இழக்கவுமில்லை. தேவனுக்கென்று ஒன்றை செய்யவும் இல்லை.

19. இப்பொழுது ஆலயக்கட்டுமான மாதிரியை நாம் பார்க்கும்போது சாலொமோன் கர்த்தருடைய கரத்தினால் எழுதிக்கொடுக்கப்பட்ட மாதிரியின்படியே கட்டினான். (1நாளா28:19) இந்நாட்களில் நம் மத்தியில் கர்த்தர் திட்டத்தைக் கொடுத்தார். கட்டிடமாதிரியைக்கொடுத்தார் என்பார்கள். அது கர்த்தர் தமது கரத்தினால் எழுதிக்கொடுத்த வரைப்படம் என்றால் அது எல்லாம் மக்களை ஏமாற்றும் வேலை. இப்பொழுது சபையானது அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் உபதேசங்கள் மேல் கட்டப்பட்டிருக்கிறது. (எபே2:20) கிறிஸ்துவின் சரீரமான சபையானது தென்னிந்திய திருச்சபை உபதேசத்தின்மேல் அல்ல, அசெம்ளி ஆப் காட் உபதேசத்தின்மேல் அல்ல, இந்திய சுவிசேஷ திருச்சபை உபதேசத்தின் மேல் அல்ல, அப்போஸ்தல கிறிஸ்தவ சபை உபதேசத்தின் மேல் அல்ல, மாறாக கிறிஸ்துவனுடைய அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. அந்த உபதேசத்தை நீங்கள் அப்போஸ்தலர்களுடைய நிருபங்களில் காணலாம். ஒவ்வொரு சபைக்கால தூதனுடைய செய்தியில் காணலாம். இதுக்குறித்து யூதா : நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுக்கூறுங்கள் என்கிறான். (யூதா:17) நாம் எபே 4:4,5 வசனங்களை கொலோ2:9, 1யோ5:20-தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் அப்10:43, 4:12, 2:38 வசனங்களின்படி நடக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அப் பவுல், எங்கள் சுவிசேஷத்தினாலே இரட்சிப்புக்கு கர்த்தர் உங்களை அழைத்தார் என்கிறான். (2தெச2:14) அப்போஸ்தலர்கள் அனைவரும் ஒருவனுக்கு அவனுடைய பாவமன்னிப்புக்கென்று, இரட்சிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்ததையே அவர்களுடைய அனைத்து நிருபங்களிலும் காண்கிறோம். பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் கொடுத்ததாக வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. மாறாக திரித்துவ ஸ்தாபன சபை ஏடுகளில் தான் நாம் இதற்கு ஆதாரங்களைக் காண்கிறோம். பெண்கள் 1கொரி11:15-யை கடைப்பிடிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். மேலும் தீத்2:4,5-யை, 1பேது3:2-6 வசனங்களுக்கு, 1தீமோ2:12 வசனங்களுக்கு கீழ்படிய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இப்படியாக நாம் எழுதிக்கொண்டே போகலாம். மேலும் இதுகுறித்து அநேக முறை எழுதியுள்ளேன். அப்.பவுல் சகோதரரே, நீங்கள் நிலைக்கொண்டு வார்த்தையினாலாவது, நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளை கைக்கொள்ளுங்கள் என 2தெச2:15-ல் எழுதிகிறான்.

20. நாம் தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது. ஆனால் திரித்துவத்திலுள்ள கள்ளகபடமுள்ள வேலையாட்கள் அப் 2:38 யை வாசித்து நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றே கூறுவார்கள். நாம் இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என கூற மாட்டார்கள். அப்8-அதியைக்கொண்டு விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பார்கள். வசனம் 15-ன் படி கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதை மறைத்துவிடுவார்கள். அப்10 அதியில் கர்த்தருடைய நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். (வசனம் 48) என்பதை மறைத்து ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பார்கள். அதேப்போன்று அப் 9 அதியிலும் அவர்கள் கர்த்தராகிய இயேவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதை மறைத்துவிடுவார்கள். இப்படியே இந்த திரித்துவ ஸ்தாபன ஊழியர்கள் அனைவரும் பிசாசின் ஏஜன்டுகளாகவே இருப்பதால் சத்தியத்தை அநியாயத்தினால் மறைத்து, அடக்கிவைத்து மக்கள் ஆத்தும இரட்சிப்பை பெறவிடாதபடி தடுத்து அவர்களை பாதாளத்திற்குள்

தள்ளுகிறார்கள், இவர்களும் அதற்குள்ளே இறங்குகிறார்கள். பிரியமானவர்களே நாமோ கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் : அப்போஸ்தலர் நடபடிகள் முதல் 3 யோவான் வரை எழுதப்பட்டுள்ள கிறிஸ்துவின் சபைக்கடுத்த உபதேசங்களுக்கு கீழ்படிய வேண்டியவர்களாயிருக்கிறோம். இதற்கு அர்த்தம், நாம் ஏனைய பகுதிகளில் காணப்படும் உபதேசங்களுக்கு கீழ்படியக்கூடாது என்பது அல்ல. இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும்.

21. நான், சேலம் டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் ஜாமக்காரன் எனக்கு கிடைக்கும் பொழுதெல்லாம் அதை தவறாது வாசிப்பவன். எனக்கு அதில் ஸ்தாபன சபைகளுக்கடுத்த, அவைகளின் ஊழியக்காரர்களுக்கடுத்த காரியங்கள் உண்டு. டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் தவறுகளை கண்டிக்கும் காரியத்தில் உள்ள துணிவு, நேர்மை பாராட்டுக்குரியதே. சுமார் 52 ஆண்டுகள் ஊழியப்பாதையில் அனுபவம் உள்ளவர். ஒரு இண்டர்நேஷனல் பிரசங்கி. ஆனால் அவர் சத்தியத்தை அறியும் அறிவில் குறைபாடு உள்ளவர் என்பது எனது தாழ்மையான கருத்து. ஜாமக்காரன் ஜீலை 2016-ல் 13வது பக்கம் இரண்டாவது பத்தியில் : இவர்களிடம் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்ற பவுலின் கேள்வியில் வேறொரு விஷயம் இருக்கிறது. இயேசு உயிர்தெழுந்து பரமேறி போகும்முன் கொடுக்கப்பட்ட கட்டளையில் நீங்கள் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டார் அல்லவா? மத்28:19. இயேசு கூறிய இந்த ஞானஸ்நானம் எடுத்திருந்தால் பரிசுத்த ஆவியைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். ஆனால் இவர்கள் அதை அறியவில்லை. இயேசுவை பற்றியும் இயேசு திரியேகத்தில் ஒருவரானவர் என்பதையும் இவர்கள் அறியாத காரணத்தால் இங்கு இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தார் என மனம்போன போக்கில் எதைஎதையோ அப்.19:1-7 சம்பவங்கள் குறித்து எழுதுகிறார்.

22. இங்கு நடந்த சம்பவம் என்ன? பவுல் எபேசுவுக்கு வருகிறான். அங்கு சில சீஷர்களைக் காண்கிறான். அவர்களிடம் நீங்கள் விசுவாசிகளானபிறகு - தமிழில் விசுவாசிகளானபோது என உள்ளது. இது தவறு. ஆங்கிலத்தில் இது Since ye believed என உள்ளது. இதற்கு நீங்கள் விசுவாசிகளான பிறகு என்றே பொருள். (19:2) ஆக பவுல், எபேசில் கண்ட சீஷர்களிடம் நீங்கள் விசுவாசிகளான பிறகு பரிசுத்த ஆவிகளை பெற்றீர்களா என்று கேட்கிறான். இங்கு அப் பவுல் அப் 2:38-யை நினைவுக்கூறுகிறான். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். (And ye shall receive அதன்பிறகு, மற்றும்) பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள். அதாவது எபேசு சீஷர்களை நோக்கி நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு பரிசுத்த ஆவியை பெற்றீர்களா என்று கேட்கிறான். அதற்கு அவர்கள் பிரிசுத்த ஆவி உண்டென்பதை கேள்விப்பட்டதே இல்லை என்றார்கள். ஆதலால் தான் பவுல் அவர்களிடம் அப்படியானால் நீங்கள் எந்த / எப்படி ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்கிறான். அப்போஸ்தலர்கள் காலத்தில் யாரும் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்ததும் இல்லை, யாரும் பெற்றதும் இல்லை. ஆதலால் எபேசு சீஷர்கள் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாததால் பரிசுத்த ஆவியைப்பற்றி அறிந்திருக்கவில்லை என்பது டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் தகுதியான விளக்கம் இல்லை. அப்படியானால் அப்போஸ்தலர்களால் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியைப்பற்றி அறியவில்லை என்பதாகும். கவனியுங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தில் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என்ற பதவிகள் / பண்புகள் / குணாதிசயங்கள் அடங்கியுள்ளன. பிதாகுமாரன் பரிசுத்த ஆவி நாமக்காரணர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால்தான் பாவமன்னிப்பு உண்டு. பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெற்றால், ஒருவனுடைய பாவம் மன்னிக்கப்படுவது இல்லை. யோவான் ஸ்நானன் தனக்குப்பின் வருகிறவராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று சொல்லி, மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தான். அப்பொழுது இரத்தம் சிந்தப்படவில்லை. ஆதலால் அப்பொழுது பாவமன்னிப்பு இல்லை. பாவங்கள் மூடப்பட்டன.(சங்32:1) பாருங்கள் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. (எபி9:22) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். (1யோ1:7) இப்பொழுது இரத்தம் சிந்தப்பட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுகிறோம். இந்த பாவமன்னிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் மாத்திரமே உள்ளது.(அப்2:38) அவரே இரத்தத்தை சிந்தியவர். ஆக பவுல் எபேசு சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பற்றி கேள்விபடவே இல்லை என்கிறார்களே, அப்படியானால் அவர்கள் எப்படி / எந்த ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதை அறிய அவர்களிடம் அந்த கேள்வியைக் கேட்கிறான். அவர்கள் நாங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்று கூறியவுடனே, அவன் அவர்களுக்கு கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே, அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தன் கடந்த கால பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, பின்பு பரிசுத்த ஆவியை பெற்றிருக்கவேண்டும். இதில் தான் அநேகர் தடுமாறுகிறார்கள். இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற எபேசு சீஷர்களின் மேல் அவன் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள் மேல் இறங்கினார்.

23. இதைக்கருத்தில் கொண்டுதான் எபே 1:13ல் நீங்கள் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்தியவசனத்தைக்கேட்டு (After ye heard the word of truth) என்று இருப்பதால் இங்கு சத்திய வசனத்தை கேட்டபிறகு என்று இருக்கவேண்டும். ஆக சத்திய வசனத்தைக் கேட்ட பிறகு வாக்குதக்கம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் அவருக்குள் முத்திரைப் போடப்பட்டீர்கள். இங்கும் ஆங்கிலத்தில் After ye believed, ye were sealed with that Holy Spirit of Promise என்றே உள்ளது. இங்கு கவனியுங்கள் விசுவாசித்தப்பிறகே என்றே உள்ளது. ஆக விசுவாசிகளானபோது என்பது தவறான மொழிப்பெயர்ப்பு. விசுவாசிகளானபிறகு அப் 19:2, எபே1:13 ஞானஸ்நானம் பெற்றபிறகு அப் 2:38 பரிசுத்த ஆவி என்பது தான் சரியான போதனை. அதாவது முதலில் விசுவாசம், பின்பு ஞானஸ்நானம், அதன்பின்பு பரிசுத்த ஆவி. இதுதான் ஒருவனுடைய இரட்சிப்புக்கடுத்த சரியான ஒழுங்குமுறை. ஆனாலும் இதில் விதிவிலக்கு உண்டு. கொர்நேலியு வீட்டாரில் முதலில் விசுவாசம், பின் பரிசுத்த ஆவி, அதன்பின் ஞானஸ்நானம்.(அப் 10:44,48) இதை விட்டுவிட்டு அவர்கள் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவில்லை, ஆதலால் அவர்கள் பரிசுத்த ஆவியைப்பற்றி அறிந்திருக்கவில்லை என்பது லௌகிக ஞானம். இப்படியாக அநேக உபதேசங்களில் டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் தவறு செய்கிறார்கள் / இடறுகிறார்கள். என்னுடைய நிதாணிப்பின்படி சகோதரரிடத்தில் தேவனைப் பற்றிய வைராக்கியம் உண்டு. ஆனாலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியம் இல்லை. ஏனென்றால் இன்னும் அவருக்கு பிதாகுமாரனையும், குமாரன் பிதாவையும் வெளிப்படுத்தவில்லை. (மத்11:27,16:13-17, யோ14:8,9)

24. இப்பொழுது சாலொமோன் கட்டிய தேவாலயத்தில் அஸ்திபாரம் குறித்துக் காண்போம். சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்கு காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனுடைய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்து ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட தொடங்கினான். அவன் தான் ராஜ்யபாரம் பண்ணின நாலாம் வருஷத்தில் இரண்டாம் மாதம் இரண்டாம் தேதியில் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். (2நாளா3:1-2) மோரியா மலையில்தான் ஆபிரகாம் ஈசாக்கை தகனபலியிடச் சென்றான். (ஆதி22:2)

(அ) போடப்பட்டியிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறொரு அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது. (1கொரி3:11) சபையின் அஸ்திபாரம் அவரே. நம்முடைய வாழ்க்கையின் அஸ்திபாரமும் அவரே. அவரையல்லாமல் வேறொரு அஸ்திபாரம் இல்லை. சிலர் ஏழாம் சபைக்கால தூதன் மீது அந்த அஸ்திபாரத்தைப்போட விரும்புகிறார்கள். அது நிலைக்காது. சிலர் வெளிநாடு ஊழியக்காரர்களிடமிருந்துக் கிடைக்கும் பொருளாதாரத்தைக் கொண்டு அவர்கள் மேல் தங்களது அஸ்திபாரத்தைப்போட நினைக்கிறார்கள். அந்த அஸ்திபாரமும் அழிந்துப்போகும். சிலர் தங்களது புதுப்புது உபதேசங்களைக் கொண்டுவந்து அதன்மீது அஸ்திபாரத்தைப்போட நினைக்கிறார்கள். அதுவும் அழிந்துப்போகும். கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவின் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசங்களின் மேல் கட்டப்பட்டு ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைவதற்கு வளர்ந்து வருகிறது. நீங்கள் உங்கள் தென்னிந்திய திருச்சபை, அசெம்ளி ஆப் காட், இந்திய சுவிசேஷ திருச்சபை போன்ற சபைகளின் மூல உபதேசங்கள் மீதும் கட்ட முடியாது. அது உங்களை மோசம் போக்கும். அது மண்ணில்மேல் கட்டப்பட்டது. ஆதலால் அது அழிந்துப்போகும். பாருங்கள் கன்மலை மீது அஸ்திபாரம் தேவை. அது அழியாது. (மத்7:24,25) அந்த கன்மலை கிறிஸ்து (1கொரி10:4) அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்து என்னும் கல் பெரிதும் விலையேறப்பெற்றதுமானது. (1ராஜா5:17) இது மனுஷரால் தள்ளப்பட்டது. ஆனாலும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட விலையேறப்பெற்றதான ஜீவனுள்ளக்கல். (1பேது2:4) தேவனுடைய வார்த்தைக்காக நீ உன் குடும்பத்தினரால் உன் இனஜனபந்துக்களால் உன் நண்பர்களால், உன் உடன் விசுவாசத்திலுள்ள விசுவாசிகளிலால் தள்ளப்படும்போது அது நீ தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. நீ மனுஷர்களால், ஸ்தாபன சபைகளால் தள்ளப்பட்டிருக்கலாம். அது நீ தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரம் என்பதைக் காட்டுகிறது. பாருங்கள் பவுல் எல்லாராலும் கைவிடப்பட்டான். (2தீமோ4:16) எலியா நான் மட்டும் மீதியிருக்கிறேன், மற்ற தீர்க்கதரிசிகள் அனைவரையும் யேசெபேல் கொன்றுபோட்டுவிட்டாள் என்கிறான். (ரோ.11:3,4) ஆனால் தேவன் இவர்களை தெரிந்துக்கொண்டார். அதுபோல் நம்மையும் தெரிந்துக்கொண்டார். தேவன் தம்முடைய மணவாட்டியை தெரிந்துக்கொண்டார். எது முதல்? உலக தோற்றத்திற்கு முன்னே (எபே.1:4)
(ஆ) அடுத்த இது பரீட்சிக்கப்பட்ட கல் (எசா28:16) இங்கு உன்னுடைய விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும். கானானிய ஸ்தீரி (மத்15:22-28) இவள் ஒரு புறஜாதிப்பெண். இவள் இயேசுவை தாவீதின் குமாரனே என்றாள். பதிலில்லை. ஏன்? அவர் இஸ்ரவேலருக்கு தாவீதின் குமாரர். புறஜாதிகளுக்கு அல்ல. அந்த சம்பவ வேளையில் அவர் தாவீதின் குமாரர் அல்ல. அப்பொழுது அவர் மனுஷகுமாரன். மனுஷகுமாரனை அவள் தாவீதின் குமாரன் என்று அழைத்ததால் பதில் இல்லை. சீஷர்கள் அவரிடம் சென்று அவளுக்காக வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர் காணாமற்போன இஸ்ரவேல் வீட்டாருக்காக அனுப்பப்பட்டேன் என்றார். உடனே அவள் ஆண்டவரே என்றாள். பதில் கிடைத்தது. ஆனாலும் அவள் நினைத்தது கிடைக்கவில்லை. பிள்ளைகள் (இஸ்ரவேலர்) அப்பத்தை நாய் குட்டிகளுக்கு போடுவது நல்லது அல்ல என்றார். அவள் தனது விசுவாசத்தை அறிக்கையிட்டாள். நாய்க்குட்டி எஜமான் மேஜையிலிருந்து விழும் துனிக்கைகளை திண்ணுமே என்றாள். அவர் அவள் விசுவாசத்தை அங்கீகரித்தார். உன் விசுவாசம் பெரிது என்றார். ஆம் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும். நான் அறிந்த ஒரு சகோதரன்

நன்கு வைராக்கியமாக ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து வந்துக்கொண்டிருக்கும் வேளை. ஊரிலுள்ள அனைத்து ஊழியர்களும் சரியில்லை. எங்கும் சபைகூடுதலுக்கு போக முடியவில்லை என, தன் இல்லத்திலே ஒரு சபை கூடுதலுக்கான ஐக்கியத்தை உருவாக்கினார். தன் குடும்பத்தில் பலரை ஆயத்தப்படுத்தினார். ஆனால் விதைத்த விதை மேலும் வளரவில்லை. அனைவரும் பின்வாங்கிப் போனார்கள். ஒரு காலக்கட்டத்தில் அவருடைய விசுவாசமும் சோதிக்கப்பட்டது. தன் மூன்று குமாரர்களில் ஒருவனை இழந்தார். விசுவாசப் பரீட்சையில் அவரால் நிலைத்து நிற்க முடியவில்லை. அத்துடன் அவரது ஆடல் பாடல் துள்ளிகுதித்தல் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்தது. சத்தியத்தை மறுதலித்தார். சத்தியத்தில் வழிநடத்திய ஊழியக்காரரை வெறுத்தார். சோதனைகளை சகிக்கிற மனுஷனே பாக்கியவான். நான் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும். ஆதலால் நாம் சோதிக்கப்பட வேண்டும். அது நமக்கு மிகவும் அவசியம். அப்பொழுதுதான் அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனென்றால் அது அக்கினியினால் வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும். (1கொரி3:13) சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ வை பாருங்கள். நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார். விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வது இல்லை. (தானி3:17) விசுவாசத்தின் உறுதியைப்பாருங்கள். எங்களை தப்புவிற்காமல் போனாலும் உம்முடைய தேவனை ஆராதிப்பது இல்லை. அதுதான் எங்களது முடிவு. ஒகோ! அப்படியா, எரிந்துக்கொண்டியிருக்கிற சூளையை ஏழு மடங்கு அதிகம் சூடாக்குங்கள். அதனால் எங்களுக்கு ஒன்றும் ஆகப்போவது இல்லை. முடிவு என்ன? அக்கினி, அவர்களை தூக்கிக்கொண்டு சென்ற புருஷர்களைக் கொன்றது. தேவனுடைய தாசர்கள் அக்கினியின் நடுவிலே நான்காவது நபர் ஒருவருடன் உலாவினார்கள். பாருங்கள் இவர்கள் ராஜாவின் கட்டளையைத் தள்ளினார்கள். தங்கள் சரீரத்தை அக்கினிக்கு ஒப்புக்கொடுத்தார்கள். தேவன் தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய தாசர்களை விடுவித்தார்.(தானி3:28) ஆம் பிரியமானவர்களே! கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிகளாயிருக்கிறதற்கு மாத்திரம் அல்ல, அவர் நிமித்தமாக பாடுபடுவதற்கும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. (பிலி1:29)

25. இப்பொழுது ஆலயத்தின் கட்டுமானப் பொருட்கள் பற்பல இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டன. (1நாளா22:4) நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். (1கொரி12:13) கிறிஸ்துவின் சரீரம் பரிபூரணமடையும் வரை, நாம் எபேசு சபைக்காலம் முதல் லவோதிக்கேயா சபைக்காலம் வரை பற்பல இடங்களிலிருந்து கூட்டிச்சேர்க்கப்படுகிறோம். நான் சென்னையிலிருந்து, சகோ பிரன்காம் அமெரிக்காவிலிருந்து, இன்னும் சிலர் ஜெர்மனியிலிருந்து, கனடாவிலிருந்து, இப்படியாக பல நாடுகளில், பல இடங்களிலிருந்து அந்த சரீரத்திற்குள் வருகிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது யூதரையும், புறஜாதிகளையும் கொண்டது. (ரோ9:24, 1 கொரி12:13, எபே2:11-22, கொலோ3:11,15)

26. அடுத்து அஸ்திபார கற்கள் யாவும் பணிதீர்ந்துக் கொண்டுவரப்பட்டது. (1இரா6:7, 1 நாளா22:2) அஸ்திபாரம் போடப்படும்போது கற்களில் சுத்தியலின் சத்தம் எதுவும் கேட்கப்படவில்லை. வாச்சியின், உளியின் சத்தம் எதுவும் கிடையாது. சுருக்கமாக கூறப்போனால் கற்கள் மேல் எந்தவிதமான ஆயுதங்களின் சத்தம் கேட்கப்படவில்லை. அவைகள் யாவும் சிற்பாசாரிகளால் வெட்டி, ஆயத்தப்படுத்தப்பட்டு அஸ்திபார ஸ்தலத்திற்கு கொண்டுவரப்பட்டன. (1இரா5:17) கவனியுங்கள் நாம் யாவரும் குற்றமுள்ள கற்கள். ஒரே வடிவத்தில் இல்லை. பற்பல தோற்றங்களில் காணப்படுகிறோம். ஆதலால் நாம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவங்களாக முற்றிலுமாக தகுதியாக்கப்பட்டு, பின் சரீரத்தோடு கொண்டுவந்துப் பொருத்தப்படுகிறோம். இங்குதான் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சிக்கு வருகிறோம். நம்முடைய விசுவாசம் அது பூரணப்பட்டவுடன் அத்துடன் வல்லமையை பரிசுத்த ஆவி கூட்டிச்சேர்கிறது. பின் அதனோடு தேவஞானம், தன்னடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் ஒன்றோடு ஒன்றாக அது அது பூரணமடைந்தவுடன் கூட்டி, கூட்டி சேர்க்கப்பட்டு தகுதியாக்கப்படுகிறோம். அனைத்து சுபாவங்களும் ஒன்றோடு ஒன்றாக அதனதன் கிரமமாக இணைந்திணைந்து ஒன்றாக காணப்பட்டு, சரீரத்தில் கொண்டுவந்து பொருத்தப்படுகிறது. ஒவ்வொரு அவயவமும் சரீரத்தில் கொண்டு வைக்கப்பட்டு, பின்பு அங்கு அது சரிசெய்யப்பட்டு பொருத்தப்படுவதில்லை. சபைகளில் ஐந்து வகை ஊழியங்களைக் கொண்டு ஒவ்வொரு அவயவமும் சரிசெய்யப்பட்டு பின் கொண்டுவந்து கிறிஸ்துவின் சரீரத்தில் பொருத்தப்படுகிறது. ஐந்து வகை ஊழியர்கள் தான் சரீரத்தை செதுக்கும் சிற்பாசாரிகள். ஒரு மேய்ப்பன் மந்தையை மேய்ப்பவன் மாத்திரமே. மந்தைக்கு தேவையான ஆகாரங்களை கொண்டுவந்து சேர்ப்பது இதர ஊழியங்கள். இதர ஊழியங்கள் கொண்டுவரும் ஆகாரத்தைக் கொண்டு மேய்ப்பன் மந்தையை மேய்க்கிறான். அதுதான் அவனது பணி. அதை விட்டுவிட்டு சபைக்கு மேய்ப்பனே எல்லாவற்றிற்கும் எல்லாம் என்பது கர்த்தருக்குரிய தசமபாகத்தை காணிக்கையை முற்றிலுமாக அபகரிக்க, விழுங்க ஒரு மேய்ப்பன் பிசாசின் ஒத்தாசையுடன் நடத்தும் ஒரு கபடமுள்ள நாடகமாகும். சென்னை வளசரவாக்கம் பாஸ்டர் போன்று சில சபை மேய்ப்பர்கள் தாங்களே எல்லாருக்கும் எல்லாம் என்கிறார்கள். இது பேய்த்தனத்துக்கடுத்தது. இவர்களை மேய்ப்பனாகக் கொண்ட சபை ஒருகாலும் பக்திவிருத்தி அடையாது. விசுவாசிகள் கூண்டுக்கிளிகளாக இருக்கிறார்கள். பாஸ்டர் கூறுவதையே அவர்களும் கூறுவார்கள்.

அதற்கு மிஞ்சி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அடுத்து இது பரிசுத்த ஆவியின் யுகமாகயிருப்பதால், பரிசுத்த ஆவியின் பெயரில்அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதை செய்துவரும் காலமாயிருக்கிறது. இப்படிப்பட்ட மேய்ப்பர்கள் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள் என திரும்ப திரும்ப எழுதி வருகிறேன். ஆனால் நீங்களோ அதை காதில் போட்டுக் கொண்டதாக தெரியவில்லை. நோவாவின் காலத்தில் நடந்தது போல நடக்கும்.

27. முடிவாக அஸ்திபாரத்திற்கென குழிதோண்டி, அஸ்திபாரத்தை போட்டு பின்பு குழியை மூடுவார்கள். அஸ்திபாரம் அடக்கத்திற்கு எடுத்துக்காட்டு. சாலொமோன் வெட்டிய கல்லால் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைக் கொண்டு வந்தான். (1ராஜா5:17) இந்த விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ளக்கல் கிறிஸ்துவைக் குறிக்கிறது. (1பேது2:4) போடப்பட்டியிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது. (1கொரி3:11) கல், நமது நம்பிக்கையாக இருக்கிறது. நமக்கு நல் நம்பிக்கையை கிருபையாய் கொடுக்கிறவர் தேவன். நித்திய ஜீவன் உண்டாகும் என்ற நம்பிக்கையின்படி நாம் சுதந்தரராகத்தக்கதாக பரிசுத்த ஆவி நம்மீது சம்பூரணமாக பொழியப்பட்டுள்ளது. (தீத்3:6,7) கல் நமது நம்பிக்கையின் உறுதி. கர்த்தரை தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். (எரே17:7) ஆக ஆலயத்தின் அஸ்திபாரம் கிறிஸ்துவுடனே கூட ஞானஸ்நானத்தில் நம்முடைய அடக்கத்தைக் குறிக்கிறது. நாம் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு மீண்டும் அவருடன் உயிர்த்தெழுந்து தேவமகிமையை அடைவோம் எந்த நம்பிக்கையின் மேல் அடக்கம் செய்யப்படுகிறோம். (ரோ5:2) கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார். (கொலோ1:27) தேவமகிமையை அடைவோம் என்பதே நமது நம்பிக்கை. (ரோ5:2)

28. அடுத்து சாலொமோன் கட்டிய தேவாலயத்தில் லீபனோன் கேதுரு மரங்கள் உபயோகப்படுத்தப்பட்டது. (1ராஜா5:6) தேவனுடைய தாசனாகிய மோசே யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று கேட்டுக்கொண்டான். ஆனால் கர்த்தரோ, போதும் இனி இந்தக்காரியத்தைக் குறித்து என்னோடு பேச வேண்டாம். என்று கூறிவிட்டார். அவனுடைய கண்களினால் மட்டும் அதைக்காண அனுமதித்தார். (உபா3:25,26) லீபனோன் ஒரு மிதவெப்பமான (Warm) தேசமாகும். ஆதலால் இங்குள்ள கேதுரு மரம் மிக வலிமையுள்ளதாக இருக்கிறது. இது ஆவியின் வல்லமை நிறைந்த ஒரு மனிதனைக் குறிக்கிறது. இது நம்முடைய விசுவாசத்தைக் குறிக்கிறது. விசுவாசமானது நமது நம்பிக்கையின் உறுதி. (எபி11:1) உயிர்தெழுதலின் மேல் நமது விசுவாசம். (1கொரி15:14,17, 1தெச4:16-17) விசுவாசத்தை துவக்குகிறவர் கிறிஸ்து (எபி12:1) கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு உயிர்தெழுந்தார். நாமும் உயிர்தெழுவோம். நாம் அஸ்திபாரத்தில் அடக்கம்பண்ணப்பட்டு இப்பொழுது கட்டுமானத்தில் உயிர்தெழுந்துள்ளோம். நம்முடைய விசுவாசம் கேதுரு மரத்தைப்போன்று வளரவேண்டும். (சங் 92:12)

29. கவனியுங்கள். சிம்சோனுக்குள் இருந்த ஆவியின் வல்லமையை. (நியாயாதி14:6,19, 15:14) கர்த்தருடைய ஆவி சிம்சோன் மேல் பலமாய் இறங்கியது. தன் கையில் ஒன்றுமில்லை. ஆனால் ஒரு கெர்ச்சிக்கிற பாலசிங்கத்தை, ஒரு ஆட்டுக்குட்டியை கிழித்துப் போடுகிறது போல கிழித்துப்போட்டான். அடுத்து ஸ்தேவானைப் பாருங்கள். பல நாட்டினர் அவனோடு தர்க்கம் செய்கிறார்கள். ஆனால் ஸ்தேவான் பேசின ஞானத்தையும், அவனிடமிருந்த ஆவியையும் அவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. (அப்6:10) திரித்துவ ஸ்தாபன சபை ஊழியர்களோடு தேவத்துவத்துக்கடுத்த காரியத்தின் தர்க்கம், ஞானஸ்நானத்திற்கடுத்த முறையில் தர்க்கம், இயேசுவே மாத்திரம் கூட்டத்தாரோடு தர்க்கம், பிரன்காம் கிறிஸ்து கூட்டத்தாரோடு தர்க்கம், காக்குவ் பிலிப்பு தீர்க்கதரிசி என்று பறைசாற்றும் கூட்டத்தாரோடு தர்க்கம், ஒரு ஸ்தீரியின் தலைக்கு அவள் சேலை முந்தானையே முக்காடு என்பவர்களோடு தர்க்கம். இப்படியாக தர்க்கங்கள் நாளுக்குநாள் நீண்டுக்கொண்டே போகிறது. ஆனால் தேவன் தம்முடைய பிள்ளைகளை விரோதிக்கிறவர்களை ஒருவரும் எதிர்பேசவும், எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும், ஞானத்தையும் கொடுக்கிறார். அல்லேலூயா! (லூக் 21:15) சாலொமோன் ஆலயத்தின் உட்புறம் தளம் தொடங்கி மேல் மச்சுமட்டும் கேதுரு மரத்தினால் வேலைப்பாடுகளை செய்தான். இந்த கேதுரு மரம் நமது விசுவாசத்தைக் குறிக்கிறது. நம்முடைய விசுவாசம் கேதுரு மரத்தைப்போல் உறுதியுள்ளதாக வளரவேண்டும். மேலும் நம்முடைய விசுவாசம் உயிர்தெழுதல் மேல் உள்ளது. (1கொரி15:14,17, 1 தெச4:13,14) அஸ்திபாரம் என்பது நம்முடைய நம்பிக்கை, அடக்கம். விசுவாசம் என்பது உயிர்தெழுதல் ஆகும். அஸ்திபாரத்திற்கு மேல் கட்டிடம் எழும்புகிறது. விசுவாசம் நம்பிக்கையின் உறுதியாகும். நம்பிக்கை ஒன்றில் மேல் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் விசுவாசம் அதை பெற்றுவிட்டதானது. நம்பிக்கை விசுவாசத்தின் இடத்தை பெறமுடியாது. நம்பிக்கை ஒன்று நடக்கும் என்பதாகும். ஆனால் விசுவாசமோ அது நடந்துவிட்டது என்பதாகும். (எபி11:1-3) நல்ல போராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை எனக்கு தந்தருளுவார். (2தீமோ4:8) அதுதான் அது, விசுவாசம்.

30. மூன்றாவதாக சாலொமோன் தேவாலயத்தைக்கட்ட வாசனை மரங்களை உபயோகித்தான். வாசனை மரங்கள் லீபனோனிலிருந்து கொண்டுவரப்பட்டது. (2நாளா2:8) மேலும் ஓப்பீரிலிருந்து மிகுந்த வாசனை மரங்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது. (1ராஜா10:11,12) வாசனை மரங்கள் (Algum Trees – Almug Trees) என அழைக்கப்படுகிறது. இது நம்முடைய சந்தன மரங்களுக்கு ஒப்பானது. இதை சாலொமோன் ஆலயத்தின் அலங்கார பொருட்கள் செய்ய (Ornamental, Decoration works) உபயோகப்படுத்தினான். மனமானது அன்புக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அதை நாம் அன்பு மனம் என்கிறோம். என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன். நீ எனக்கு வெகு இன்பமானவன், உன் சிநேகம் ஆச்சரியமாய் இருந்தது, ஸ்தீரிகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாய் இருந்தது. (2சாமு1:26) நான் உங்களில் அன்பாய் இருக்கிறது போல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கவேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாய் இருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதனுக்காக தன் ஜீவனைக்கொடுக்கிற அன்பிலும், அதிகமான அன்பு ஒருவனிடத்திலும் இல்லை. (யோ15:12,13) நான் மனுஷர்பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிறாவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்திருந்தாலும், மலைகளை பெயர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் அன்பு எனக்கிறாவிட்டால் நான் ஒன்றும் இல்லை. எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தை சுட்டெறிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிறாவிட்டால் எனக்கு பிரயோஜனம் ஒன்றும் இல்லை. அன்பு நீடிய சாந்தமும், தயவும் உள்ளது. அதற்கு பொறைமை இல்லை. அன்பு தன்னை புகழாது, இருமாப்பாயிராது, அயோக்கியமானதை செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நிலையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. (1கொரி13:1-8) மணவாட்டி மணவாட்டி என வாய் கிழிய பேசுகிறவர்களே, இந்த நற்பண்புகள் உங்களிடத்தில் உண்டா? உங்கள் பாஸ்டரிடத்திலாவது உண்டா? இந்த குணாதிசயங்களை நீங்களும் உங்கள் பாஸ்டரும் பெற்றுக்கொள்ளாத நிலையில் உங்கள் பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும் என ஒரு எச்சரிக்கை உங்களுக்கு கொடுக்கிறேன். ஏமாந்து போகாதீர்கள், வஞ்சிக்கப்படாதீர்கள், காலம் கொடிதானது, வஞ்சனையானது, உங்களுடைய அன்பும், உங்கள் பாஸ்டருடைய அன்பும் மாயையாகவே இருக்கிறது.

31. இப்பொழுது அன்பின் லட்சணத்தைப் பாருங்கள். அன்பு மாயமற்றதாக இருக்கும். (ரோ.12:9, 2 கொரி6:6) உங்களுடைய அன்பு உங்களில் பக்திவிருத்தியை உண்டாக்குவதாக இருக்கிறது. (1கொரி8:1) அன்பு திரளான பாவங்களை மூடும். (1பேது4:8, நீதி10:12) தேவன் அன்பாகவேயிருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். (1யோ4:16) இப்பொழுது கவனியுங்கள். கிறிஸ்து நமக்காக தம்மைதாமே தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாக ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தார். (எபே5:2) அதுபோன்று நாம் நம்மை கிறிஸ்துவுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாக ஒப்புக்கொடுத்து, நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூற வேண்டும். (யோ15:12) பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ள வேண்டும். (கொலோ3:14) அப்பொழுது நாம் அவருடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துக்கொள்வார்கள். (யோ13:35) அன்பு எப்பொழுதுமே திருத்துகிறதாக இருக்கிறது. உண்மையான அன்பு பிழைகளைத் திருத்தும். ஆதலால் உங்கள் பிழைகள் / தவறுகள் திருத்தப்படும்போது நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல அதன்படி நடந்து கனி கொடுக்கிறவர்களாயிருக்க ஆவியின் கனிகள் உங்களிடத்தில் காணப்படவேண்டும். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது. (1கொரி13:13) சாலொமோன் கட்டிய ஆலயத்தின் அஸ்திபாரம் முதல் அதன் மேல்மட்டம் வரை நம்பிக்கை, விசுவாசம், அன்பு இம்மூன்றும் காணப்பட்டது. இது உங்களிடத்திலும் காணப்படுமாயின் உங்கள் சரீரம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாறும். அன்று சாலொமோன் கட்டிய தேவாலயத்தில் தேவன் வாசம் செய்தார். இன்று அவர் தம்முடைய மணவாட்டியின் சரீரத்தில் வாசம் செய்கிறார். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியுனுடைய ஆலயமாயிருக்கிறது. (1கொரி6:19) அன்று தேவன் தம்முடைய ஆவியை கிறிஸ்துவில் ஊற்றினார். இன்று கிறிஸ்து தம்முடைய ஆவியை தமது மணவாட்டிக்குள் ஊற்றிருக்கிறார். ஆம் இன்று தேவன் தம்முடைய மணவாட்டிக்குள் இருந்து செயல்பட்டுக்கொண்டு, பேசிக்கொண்டு இருக்கிறார். ஆம் ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள். தாகம் உள்ளவன் வரக்கடவன். விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை (பரிசுத்த ஆவியை) இலவசமாய் வாங்கிக்கொள்ள கடவன். (வெளி22:17)

32. அன்று, அதாவது ஆதியில் தேவன் ஏதேன் தோட்டத்தில் பகலின் குளிர்ச்சியான வேளையில் உலாவி வந்தார். ஆதாமும், ஏவாளும் தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். (ஆதி.3:8,9) இதன் பின்பு தேவன் உடன்படிக்கை பெட்டியில் மனுஷனை சந்தித்து ஒரு கூடாரம் விட்டு மறு கூடாரம் சென்றார். ஒரு வாசஸ்தலத்திலிருந்து மறு வாசஸ்தலம் போனார். (1நாளா17:5) பின்பு தேவன் சாலொமோன் கட்டிய தேவாலயத்தில் வாசம் செய்தார். கர்த்தர் சாலொமோனை நோக்கி : நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றென்றைக்கும் விளங்கத்தக்கதாக அதை பரிசுத்தமாக்கினேன். என் கண்களும் இருதயமும் எந்நாளும் அங்கே

இருக்கும் என்றார். (1ராஜா9:3) சாலொமோன் கட்டிய ஆலயம் தேவன் வாசம் பண்ணத்தக்க வீடும் அவர் என்றென்றிற்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமாகிய ஆலயமாயிற்று. (2நாளா6:2) இப்பொழுது தேவன் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். (அப்7:49) தென்னிந்திய திருச்சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை, அசெம்ளி ஆப் காட் போன்ற ஸ்தாபன சபைகள் கட்டியுள்ள பிரம்மாண்டமான ஆலயங்களில் தேவன் வாசம் செய்யார். அது நான்கு சுவர்களைக் கொண்ட ஒரு கட்டிடம் மாத்திரமே. கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி பொய்வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள், உங்களை நீங்களே வஞ்சித்துக்கொள்ளாதிருங்கள். இப்பொழுது நாமே தேவன் வாசம் செய்யும் ஆலயம். தேவனுடைய ஆவி நமக்குள் வாசமாயிருக்கிறார். (1கொரி3:16,17) நம்முடைய சரீரமானது தேவனாலே பெற்றும், நம்மில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயம். (1கொரி6:19) நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம். (2கொரி6:16)

33. சாலொமோனுக்கு இந்த ஆலயத்தை கட்டி முடிக்க ஏழு வருடங்கள் ஆனது. நாலாம் வருடம் சீப் மாதமாகிய இரண்டாம் மாதத்திலே கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்டது. 11-ஆம் வருடம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே அந்த ஆலயம் முழுவதும் சகல சட்டத்திட்டத்தின் படியே ஒரு பங்கும் குறையாமல் கட்டித்தீர்ந்தது. அவன் அதைக்கட்டி முடிக்க ஏழு வருடம் சென்றது. (1இரா6:38) இந்த பிரகாரமாக இயேசு கிறிஸ்து தமது சரீரமாகிய சபையை ஏழு சபைக்காலங்களைக் கொண்டு, (வெளி1:4,20) ஏழு சபைக்கால தூதர்களைக்கொண்டு (வெளி1:20) அதை இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீக / திவ்ய சுபாவங்களில் வளரச்செய்து, அது ஒரு பரிபூரணமான மனிதனின் வளர்ச்சியை அடைந்தவுடன் (2பேது1:4-9) கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான சபையாக அதை தமக்குமுன் நிறுத்தி ஆகாயத்தில் எடுத்துக்கொள்கிறார். இதுதான் தலைக்கல் வருகையும், கிறிஸ்துவின் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலும் ஆகும். இதில் நீ பங்குபெற வேண்டுமானால் உன் சரீரம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக காணப்படவேண்டும். இதற்கு பரிசுத்த ஆவி உங்களில் வாசமாய் இருப்பது ஒன்றினாலே சாத்தியமாகும். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருந்தால் நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவி (பரிசுத்த ஆவி) இல்லாதவன் அவருடையவன் அல்ல. கிறிஸ்து உங்களுக்குள் இருந்தால் உங்கள் சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். (ரோ8:9,10)

34. தேவனுடைய ஆவி / பரிசுத்த ஆவி உங்களில் வாசமாயிருந்தால் உங்கள் சரீரம் தேவனுடைய ஆலயம் (1.கொரி 3:16, 6:19) மற்றபடி பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்பும் உள்ள பறவைகளுடைய கூடுகளுமாயிருக்கிற ஸ்தாபன சபையின் ஆவி / அந்திக்கிறிஸ்துவின் ஆவி குடி கொண்டியிருக்கிற சாத்தானுடைய சிங்காசனம் (வெளி 18:2, 1யோ 4:2,3; வெளி 2:13) தேவன் தம்முடைய ஆவியை நமக்கு தந்தருளினதாலே அவருடைய அன்பு நமக்குள் பூரணப்பட்டு, நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். உங்களிடத்தில் தேவனுடைய இரக்கமும், சமாதானமும், அன்பும் பெருகக்கடவது. ஆமென்.

**ஜனவரி 2017**

**கிறிஸ்துவின் அன்பில்**
**சகோ. காலேப் யோசுவா**

**If Undelivered**
**Please Return to**

**Caleb Joshua**
**11/2, Upstair, Opp.E.B.**
**Periyar Nagar, Senneerkuppam,**
**Poonamallee P.O.**
**Chennai – 600056**
**Mobile No. 9444701953**

**PRINTED BOOK**
**Clause No. 128 P.O. Guide Rules**
**Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**Yesuvae Vaarum Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006.**

**Editor Caleb Joshua**